காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

28.11.69

20
காசு

கேட்டீரா! சேதி!

பரிதாபத்துக்குரிய காங்கிரசுக் கட்சியை நினைத்து வேதனைப் படாமலிருக்க முடியவில்லை, 84 ஆண்டுக்கால அதன் நீண்ட வரலாற்றில், இப்போது ஏற்பட்டிருப்பதைப் போன்ற இரங்கத்தக்க நிலை இதுவரையில் ஏற்பட்டிருக்காது என்றே நம்பலாம், தலைவர்கள் கருத்து மாறுபாடுகொண்டு, ஒருவர் மேல் ஒருவர் மேஜை நாற்காலிகளையும், காலணிகளையும் வீசிக்கொண்ட வேளைகளில்கூட இது போன்ற நிலை ஏற்படவில்லை. காங்கிரஸ் நிறுவனமே பிளவுண்டுவிடும் அளவுக்கு யாரும் "குரங்குப் பிடி" யோடு இதுவரையில் இல்லை, இந்த பிளவு நிறுவனத் தூய்மைக்கு உதவியாயிருக்கும் என்று சிலர் கருத்தறிவித்தாலும், நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய, பயன்பட முடியுமா? நம்பிக்கை பிறக்குமா? என்று கவலைப்பட்டுத்தான் தீர வேண்டும். பாவம், சிண்டிகேட் என்றும், இண்டிகேட் என்றும் உடைந்ததுகூட பிரமாதமானதாக இல்லை: இண்டிகேட்—அதாவது பிரதமரின் தரப்புக்குத்தான் உண்மையான "காங்கிரஸ்" என்று தீர்ப்பும் வழங்கிவிட்டிருக்கிறார் நாடாளுமன்ற அவைத் தலைவர். சிண்டிகேட்—அதாவது காமராசர் அணிக்கு "எதிர்ப்புக் காங்கிரஸ்" என்றும் மகுடம் புனைந்திருக்கிறார் அவர் இந்நிலையில், நீதி மன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கும் வழக்கோ, பிரதமருக்கு "சம்மன்" அனுப்பி இருக்கிறது, நாடாளுமன்றத்திலே "எதிர்ப்புக் காங்கிரஸ் என்றால், நாட்டிலும் அப்படித்தானே இருக்கவேண்டும்? தீர்ப்பு எப்படி இருக்கப்போகிறதோ? எப்படி இருந்தாலும் பழைய காங்கிரசுக்கு நம் ஆழ்ந்த அனுதாபங்கள்!

* * *

பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்பு, தமிழ் நாட்டிலுள்ள ஒரு சிண்டிகேட் காங்கிரஸ் பத்திரிகையில் கட்டுரையொன்று வெளிவந்திருக்கிறது. "இந்திராவைச் சுற்றியுள்ள சோஷலிசவாதி"களைப் பற்றி எழுதவந்த நேரத்தில், நாடெங்குமுள்ள பெண்களை அல்ல—பெண்களது இனத்தையே அது கேலியும், கிண்டலும் செய்திருக்கிறது. "ஒரு தேசத்தின் எதிர்காலமே, ஒரு பெண்ணின் தனிப்பட்ட விருப்பு—வெறுப்புக்களுக்குப் பலியாவதை, பொறுப்புள்ள தலைவர்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது" என்பது அந்தக் கட்டுரையின் ஒரு பகுதி. "ஒரு பெண்ணின்" என்று குறிப்பிட்டு, அவரது 'விருப்பு—வெறுப்பு' பற்றிச் சொல்லி இருப்பதனால், "ஒரு ஆணின்" விருப்பு வெறுப்புக்களுக்கு மட்டும் "பொறுப்புள்ளவர்கள்" தலையாட்டிக்கொண்டிருப்பார்கள் என்று சொல்லாமல் சொல்லி இருக்கிறதா? அல்லது இந்திராவைக் கேலி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் "பெண்ணின்" என்று குறிப்பிட்டு பெண் இனத்தையே இழிவு படுத்துகிறதா? ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வு மிந்த நாட்டிலே என்ற பாடல் கொண்ட நாடு இது. இங்கேதான் "பெண்ணை" இழிவு படுத்துகிறார்கள். இந்திரா ஒரு பெண்ணாக இருந்துகொண்டிருப்பதால் தானே, சிண்டிகேட்டார் இவ்வளவு ஆர்ப்பாட்டங்களைச் செயது கொண்டிருக்கிறார்கள்? என்றும் எண்ணவேண்டியிருக்கிறது! இந்திரா அம்மையார் தீரமிக்க "ஒரு ஆண்" போல செயல்படுகிறார் என்றும் சிலர் சொல்லிக்கொள்கிறார்கள். எப்படி இருந்தாலும் பெண்ணினத்தை இழிவு படுத்தும் அக்கட்டுரையின் இந்தப் பகுதி, மிகவும் கண்டிக்கத்தக்கது. "ஆழமானகுழிபற்றிப்பேசிக்கொண்டிருந்த அம்மையார்கள் இதுபற்றிக் கவனித்தால் நல்லது. அவர்களுக்கெங்கே நேரமிருக்கப்போகிறது! எவ்வளவோ வேலைகள்! எத்தனையோ கடமைகள்! யார் யாரையோ திருப்திப் படுத்தவேண்டிய நிலைமைகள்!

* * *

சண்டை பிறந்தால் உண்மை பிறக்கும் என்பார்கள். கண்ணதாசன் பல உண்மைகளைக் கூற முன்வந்திருக்கிறார். "அரசியலில் யோக்யதை, நாணயம், ஒழுக்கம் கட்டுப்பாடு, நேர்மை, நியாயம் இருக்கவேண்டும்" என்று அண்மையில் காமராசர் பேசி இருப்பதை மனதில் வைத்தோ என்னவோ, கையெழுத்து இயக்கம்பற்றி கண்ணதாசன குறிப்பிட்டிருக்கிறார். இந்திரா அம்மையார் கையெழுத்து வாங்கியது தவறு என்றால், சுப்பிரமணியத்துக்கு எதிராக் கையெழுத்து வாங்கும்படிக் காமராசர் சொன்னது மட்டும் அரசியல் ஒழுங்கா? யோக்யதையா? நாணயமா, ஒழுக்கமா? கட்டுப்பாடா? நேர்மையா? நியாயமா? என்று கேட்கிறார். சுப்பிரமணியத்தை தான் வெளியேற்ற முயலவில்லை – தொண்டர்கள் அப்படிச் செய்தார்கள் என்றார் அவர். கண்ணதாசனின் அறிவிப்புப்படி, காமராசர்தான முன் முயற்சிகளைச் செய்தார் என்றாகிறது, கண்ணதாசனிடமிருந்து இன்னும் பல உண்மைகள் வெளிவந்தாக வேண்டும்; வெளிவரும் என்றும் நம்பலாம்! காமராசரே அரசியல் ஒழுக்கங் கெட்டவர்–நேர்மையற்றவர் — கட்டுப்பாடற்றவர் — யோக்யதையற்றவர் என்பதற்கான பல உண்மைகளை விரைவில் எதிர்பார்க்கலாம்!

* * *

பாங்குகளைத் தேசிய உடைமையாக்குவது என்பது மிகவும் முற்போக்குக் கொள்கை என்பதுடன், இதனை நிறைவேற்றுவதற்கு, எந்த முறைகளையும், — பலாத்கார வழி தேவைப்பட்டால்கூட மேற்கொள்ள வேண்டும் என்று லெனின் தம் ஒரு கட்டுரையில் கூறி இருக்கிறார். இந்தியப் பிரதமர், பாங்குகளைத் தேசவுடைமையாக்கி அறிவித்துவிட்ட பின்பு, பின் விளைவுகள் விரும்பத்தக்கவையாயில்லை. இதனாலேயே கம்யூனிஸ்டுகள், இந்திராவை தற்காலிகமாக ஆதரிக்கிறார்கள். முற்போக்குக் கொள்கைகள் கம்யூனிஸ்டுகளுக்கு மட்டுமே சொந்தம் என்றாகிவிடாது. ஆகவே, இந்திரா காந்தியும் ஒரு கம்யூனிஸ்டு என்றாகி விடாது. "நான் ஒரு உண்மை கம்யூனிஸ்டு" என்று சொன்னவர் நேரு, அவரை யாரும் ஒரு கம்யூனிஸ்டு என்று வருணிக்க முன்வரவில்லை. கம்யூனிஸ்டுகளும் ஆதரித்ததாகத் தெரியவில்லை. இந்திரா, கம்யூனிஸ்டுகளது உதவியை எதிர்பார்க்க வேண்டிய நிலையிலிருக்கிறார். அதனாலேயே அவர் கம்யூனிஸ்டாகி விடமாட்டார்? ஆனால் பாங்கி நடவடிக்கை ஒன்றின்மூலமே இந்திரா முற்போக்குக் கொள்கையின் சொந்தக்காரர் என்று கணித்து விட முடியாது. அதனைக் கணிக்க வேண்டுவது அடுத்தடுத்த அவரது நடவடிக்கைகள் அல்லவா!

★

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை
மலர் 6 | 23—11—69 | இதழ் 19

வணிகச் சமூகத்தின் கடமை!

தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்களைத் துணை வேந்தராகக்கொண்ட மதுரைப் பல்கலைக் கழகம் அளித்த "டாக்டர்" என்ற சிறப்பு விருதினைப் பெற்றுக் கொள்ள இந்தக் கிழமை, குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் தமிழகம் வந்தபோது, மதுரை—இராம நாதபுரம் வணிகச் சங்கத்தினர் அளித்த வரவேற்பில் கலந்துகொண்டு சிந்தனைக்குரிய சில கருத்துக்களைப் படைத்திருக்கிறார்.

> கலப்படம் செய்வது போன்ற ஈனச் செயல்களில் பணம் சேர்க்கும் சுயநலக்காரர்களால் வணிகச் சமூகத்தின் நற்பெயர் கெடாமல் கவனிக்கப்படவேண்டும்!
>
> நாட்டைச் சுரண்டி, கொள்ளை இலாபமடிக்கும் இப்படிப்பட்டவர்களைவணிகர்களும்,சமூகமும் ஒதுக்கி வைத்து அடையாளங் காட்ட முன் வர வேண்டும்.
>
> உற்பத்தியின் எல்லா மட்டங்களிலும். தரமும் நியாயமான விலையும் இருந்து வருமாறு கவனிக்கவேண்டும்; ஏனெனில், இவை இரண்டும் தொழில் வளர்ச்சியின் இரு முக்கியத் தூண்களாகும்.
>
> வணிகச் சங்கமும், சமூகமும் தங்கள் வணிக வளர்ச்சியைப் போன்றே மக்கள் நலத்தையும் முக்கியமானதாகக் கருதி பரந்த நோக்குடனும் பிரத்யட்ச உணர்வுடனும் செயல்பட வேண்டும்.

என்றெல்லாம் நிலைமையைத் தெளிவுபட எடுத்துக் காட்டியிருக்கிறார்.

வணிகத் துறையில் இப்படியெல்லாம் நிலைமை இருக்கிறது என்பதனால், வணிகச் சமூகம் முற்றிலுமே இப்படித்தான் இருக்கிறது என்று பொருளாகிவிடாது. யாரோ ஒரு சிலர் செய்யும் கொடுமைகள், சமூகம் முழுவதையுமே கெடுத்து விடுகிறது. துளி விஷம், குடம் பால் முழுவதையும் கெடுத்து விடுவதைப்போல.

கலப்படம் செய்வது ஈனத்தனமான வேலை என்று கிரிக்குத் தெரிகிறது, வணிகச் சங்கத்திலும் எடுத்துக் காட்டுகிறார். இது போன்ற முறைகளால் பணம் சேர்க்க முயல்வது சுயநலம் என்கிறார்.

உணவுப் பண்டத்தில் கலப்படம்செய்வது என்பது எவ்வளவு பெரிய பாவம்! என்று கூறப்படுவதுண்டு. பாவமானாலும், புண்யமானாலும் அதெல்லாம் 'மேலே' போய் கவனித்துக் கொள்ளலாம் என்பாரும் உண்டு. ஆனால், மனித குலத்தின் உயிருக்கு அது இந்த உலகத்திலேயே எந்த அளவுக்குக்கேடுண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்பதனை, நாடோறும் பெருகிவரும் நோயாளிகளின் எண்ணிக்கை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

இதைப் போலவே, சுரண்டி, கொள்ளை இலாபமடிப்போரினால் நாட்டின் பொருளாதாரம், மேலும் கீழுமாக இழுபறி நிலைக்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டு வருவது பற்றியும் எடுத்துக் காட்டி எச்சரிக்கை செய்திருப்பது பொருள் பொதிந்த ஒன்றாகும். யாரோ சிலர், எங்கோ ஓரிரு இடத்தில் பொருள்களைப் பதுக்கி வைப்பதனால் நாட்டு மக்கள் மட்டுமே யல்லாமல், அரசும் எந்த அளவுக்குத் தொல்லைப்பட நேரிடுகிறது! இந்த கேடு காரணமாக, ஒட்டு மொத்தத்தில் மக்கள் வணிகச் சமூகத்தையே குற்றங் காணத் தொடங்கிவிடுகிறார்கள். எனவே, குடியரசுத் தலைவர் குறிப்பிடுவதைப் போல், வணிகச் சமூகம், இந்தக் கெடுமதியாளர்களை ஒதுக்கி வைத்து மக்களுக்கு அடையாளங் காட்ட வேண்டுவது, நாட்டின் இன்றைய நிலையில் மிகமுக்கிய பொறுப்பாகும். பொறுப்பு மட்டுமல்ல—கடமையுமாகும்.

நம் நாட்டுப் பொருள் என்றாலே வெளிநாடுகளில் "சீந்தும்" நிலைமை மங்கிக்கொண்டு வருவதற்கு அதன் "தரம்" மிகவும் கீழாக இருப்பதுதான் என்பதனை வல்லுநர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டிக் கொண்டு வருகிறார்கள். ஜப்பான் நாட்டை நினைத்துப் பெருமூச்சு தான் விடவேண்டியிருக்கிறது வணிகச் சமூகம், இந்த விஷயத்தில் முழுக்கவனமும் செலுத்தினால்தான் வெளி உலகின் முன் தலைநிமிர்ந்து நடைபோடமுடியும். "சுதேசிப் பொருள்" என்றாலே அதிக விலை என்ற "நற்பெய"ரெடுத்திருக்கிறது. காரணம் இங்குள்ள உற்பத்தி நடைமுறை என்று கூறப்பட்டாலும், பெரும் அளவுக்கு "பேராசை" என்பதே முழுக் காரணமாயிருக்கக் காண்கிறோம். அத்துடன் உரிய தொழிலில் ஈடுபட்டிருப்போர் அனைவரும் தம் முழு அளவு ஒத்துழைப்பையும், கடமையையும்முழுதாகச் செலுத்தினால்பெரும்பான்மையான இனங்களில் விலை குறைவைக்காண முடியும் என்றும் பொருளாதாரத் துறை மேதைகள் கணித்துத் தந்திருப்பதை தவறெனக் கூறமுடியாது. விலை மலிவானது என்பதற்காகத் தரத்தையும் குறைக்கத்தேவையில்லை. அதனால்தான் கிரி அவர்கள் இரண்டையுமே இணைத்துக் கூறி இருக்கிறார்கள்.

அத்துடன், வணிகச் சங்கம், தன் வணிக வளர்ச்சியில் காட்டும் அக்கறையுடன், மக்கள் நலவளர்ச்சியிலும் பங்கு கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது, மேலே அவர் எடுத்துக்காட்டிய அனைத்தையும் மொத்தமாகக் கூறி இருக்கிறார் என்பதேயாகும்.

எனவே, யாரோசிலர் என்பதைவிட்டு, ஒவ்வொரு வணிகரும், மக்கள் நலத்துக்காகவே, வணிகம் என்று தம்மை மாற்றிக்கொள்ள முன் வரவேண்டும். இலாப நோக்கம் மட்டுமே குறிக்கோளாக இல்லாமல் நாட்டு நலனும் உடன் இணைத்துக் கொள்ளப்பட்டால்தான், கிரி அவர்கள் எடுத்துக்காட்டி இருக்கும் குறைபாடுகள் நீங்கமுடியும்.

குறைபாடுகள் நீங்கவேண்டும் என்று மட்டுமே நம்மால் எடுத்துக்காட்ட முடிகிறது. நீக்கவேண்டியவர்கள் நாமல்லவே! வணிக சமூகத் தலைவர்கள் அல்லவா! சட்டம் இருந்தாலும், மதித்து நடக்க வேண்டியவர்கள் அவர்கள் அல்லவா!

குடியரசுத் தலைவர் அவர்களது வேண்டுகோளைக் கேட்ட வணிகச் சங்கத்தினர், அதனை நிறைவேற்றித் தரும் பெரும் பொறுப்புக்குரியவர்கள். நாட்டு மக்களின் நல்வாழ்த்துக்குத் தம்மை உரியவர்களாக்கிக்கொள்வார்கள் என்பது, நம்பிக்கையாக மட்டும் இப்போதிருக்கட்டும்.

★

சென்ற இதழ்களில்......!

சோழன் குலோத்துங்க மன்னனது ஒரே மகளான அம்மங்கையின் உயிர்த் தோழியான நடனராணியை, அரசரின் அபிமானத்துக்குரிய படைவீரன் வீரமணி உயிராகக் காதலிக்கிறான். இதனால் நடனராணிக்கு அரசகுமாரியிடத்திலும் மதிப்பு அதிகமாகிறது. இதுகண்டு பொறாத மற்றோர் தோழி, கங்காபாலா என்ற ஆரியப் பெண், அரசகுமாரிக்கும், நடனராணிக்குமிடையே பகை வளர்க்கத் திட்டம் போடுகிறாள்.

வேட்டையாடச் சென்ற மன்னருடன், வீரமணியும் போகிறான். வேட்டையில் கிடைத்த பஞ்சவர்ணக் கிளியை செவிட்டு மருதன் என்பவன் மூலம் வீரமணி, காதலிக்கு அனுப்ப, அது கைமாறி இளவரசியிடம் சேர்ப்பிக்கப் படுகிறது. அதுபோல் வேட்டைக்குச் சென்றவர்களும் இடம்மாறி, உறையூரைவிட்டு கச்சிக்குச் செல்கின்றனர். உறையூரில் பஞ்சவர்ணக்கிளியை "பகடை"யாக்கிக்கொள்ள முயல்கிறாள் கங்காபாலா.

கச்சியிலோ, கலிங்கமன்னன் கப்பம் செலுத்தாததால், அவன்மீது போர் தொடுக்க அரசன் உத்திரவிடுகிறான். படைவீரர்கள் மகிழ்கின்றனர். வீரத்திற்கு வேலை வந்துவிட்டது என்று மகிழ்ந்த அதே வேளையில், தன் சூதுக்கு "வேளை" வந்துவிட்டது என்று மகிழ்ந்துகொண்டிருக்கிறாள் கங்காபாலா, உறையூர் அரண்மனையிலே......

[4]

நடனத்துக்கு அரண்மனையிலே வளர்ந்துள்ள செல்வாக்கு வீரமணியின் உயர்வுக்கும் பயன் படும். வீரமணியின் உயர்வு தமிழரின் நிலையை உயர்த்தும், தமிழர் நிலை உயருமானால் ஆரியருக்கு அந்நாட்டிலே வேலையில்லை. ஆரிய குலத்தில் பிறந்து இன உயர்வுக்குப் பாடுபடாது இருப்பதோ? எதற்கு இந்த ஜென்மம்? என்று எண்ணி ஏங்கினாள் பாலா. தன்மீது கங்கா காச்சல் கொண்டிருப்பதை ஒருவாறு நடனம் உணர்ந்தாளேயொழிய, தன்னைக் கவிழ்க்கவும் சதி செய்வாள் என்று கருதவில்லை. 'நாம் அவளுக்கு ஒரு தீங்கும் செய்தோமில்லை; நம்மை அவள் என்ன செய்யமுடியும்?' என்று கருதினாள். அம்மங்கையின் செவியிலே ஆரியப் பெண்ணின் கலகம் புகாது என்று நம்பினாள்.

இந்நிலையில் கலிங்க நாட்டின்மீது மன்னன் போர் தொடுத்த செய்தியைச் சேவகன் கொண்டு வந்தான். நடனம் திகைத்தாள். காதலன் வருவான் என்று எதிர்பார்த்திருந்தவளுக்குக் கலிங்கக் களம் புகுந்தான் என்றால் கஷ்டம் விளையாதோ? அவளுடைய நிலையை உணர்ந்த அம்மங்கை "நடனம்! உன் காதலனுக்குக் குதிரைப்படைத் தலைவன் பதவியை தந்தாராம் மன்னர், அதற்குச் சன்மானம் உண்டு. என்ன தெரியுமா? களத்திலிருந்து வீரமணி திரும்பியதும் திருமணம். திருமணம் நடக்கும்போது பரிசாக அழகிய கிராமம் ஒன்று தரப்படும் மன்னரால். நான் ஓர் முத்துமாலை தருவேன் பரிசாக" என்று கூறினாள். நடனராணி வேதனையை மறந்து வெட்கித் தலைகுனிந்து "தங்கள் அருள் இருப்பின் போதும் அம்மையே" என்று சொன்னாள்.

பெருமூச்சை கங்கா அடக்கியபடி "எப்படியோ நடனமாடி, கண்ணையும் கையையும் காட்டி மயக்கி விட்டாய், சரியான ஆள் சிக்கிவிட்டார், உனக்கு யோகந்தானடி நடனம். ஆனால், கலிங்கப் போரிலிருந்து உன் காதலன் திரும்பி வரவேண்டும்;

கௌரி பூஜை செய்" என்று கேலி செய்ய, நடனம் வெடுக்கென்று 'கௌரி பூஜை நான் செய்து பயன் என்ன? அவருடைய கண் ஒலியும் வாள் ஒலியும் கூர்மையாக இருக்கும்வரை வெற்றி ஒலி கேட்டுத் தானே தீரும் அவர் சாமான்யமானவரா?" என்று பூரிப்புடன் பேசிட, இதுதான் சமயம் என்றுணர்ந்த பாலா "தொண்டைமானிடம் இவன் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டு நடனத்தின் வாயிலிருந்து ஏதேனும் வம்பு வெளிவராதா என்று எதிர்பார்த்தாள். "தொண்டைமான் தீரர், என் காதலரும் வீரரே! மாற்றுக் குறைந்தவரலலர்" என்று நடனம் பதிலுரைத்தாள். கங்கா கலகலவெனச் சிரித்துக் கொண்டே "அவர் மாற்றுக் குறையாதவர்தான் ஆனால்..." என்று இழுத்தாள். "நான் மாற்றுக் குறைந்தவள் என்று கூறுகிறாயா?" என்று நடனம் கோபக்குறியுடன் கேட்கவே, அம்மங்கை மீண்டும் அமளி வந்துவிடப் போகிறதென்று அஞ்சி "கங்கா என்ன இருந்தாலும் உனக்கு வாய் துடுக்குத்தான்" என்று கடிந்துரைத்துப் பாலாவின் வாயை அடக்கினாள்.

'ஆமாம். நான் ஒரு நாட்டியக்காரி தான். பரத்தையின் வளர்ப்புப் பெண். இதைத் தானே நீ குறிப்பிட்டாய். இதுதானே என் மாற்றுக் குறைவு! பேஷ்! கங்கா! என் பிறப்புக்காக நான் வெட்கப்படவில்லை. என் நடனத்திற்காக நான் வெட்கப்படத் தேவையில்லை. என் நிலைக்காக நான் நாணிடவும் வேண்டியதில்லை. என்னை நான் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறேன். நீ உன்னை யார் என்று தெரிந்துகொள்" என்று அதிகக் கோபத்துடன் பேசிவிட்டு "தேவி! இன்று முதல் நான் வெளியே விடுதி ஏற்படுத்திக்கொண்டு வாழ விரும்புகிறேன். உத்திரவு தரவேண்டும்" என்று அம்மங்கையைப் பணிவோடு கேட்க, அம்மங்கை திகைத்து நிற்கையிலே "ஆமாம், தனி ஜாகை அவசியந்தான் உனக்கு. சதிகாரர்கள் கூடிட இரகசிய இடம் வேண்டாமோ? என்று பாலா கூறினாள்.

"என்னடி உளறுகிறாய்" என்று அம்மங்கை அதட்டினாள். பயந்தவள்போல் பாலா பாசாங்கு செய்துகொண்டு "மன்னிக்கவேண்டும், கோபத்தால் ஏதோ கூறிவிட்டேன். நான் அதைக் கூறியிருக்கக்கூடாது; என் மனதிலேயே போட்டு வைத்திருக்க வேண்டியதைக் கொட்டிவிட்டேன். அதைத் தயவு செய்து மறந்துவிடுங்கள்." என்று கூறினாள். அம்மங்கை ஒன்றும் புரியாமல் பாலாவின் கரத்தைப் பிடித்திழுத்துக் கடுங்கோபத்துடன் "விளையாடாதே உண்மையை ஒளிக்காதே! சதிகாரர் என்று யாரைக் கூறினாய்? நடனாவுக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? இப்போதே கூறு; இல்லையேல் நான் உன்னைத் தண்டிக்க ஏற்பாடு செய்வேன்" என்று மிரட்டினாள்.

"ஐயய்யோ! இதென்ன எனக்கொன்றும் புரியவில்லையே" என்று கைபிசைந்து நின்றாள் நடனம்.

கங்கா, "தேவி! என்னை என்னவேண்டுமானாலும் செய்யுங்கள்; நான் மட்டும் அதனைக் கூறவே மாட்டேன். அதனால் பலருக்குக் கேடு வரும். அந்தப் பாபம் எனக்கு வேண்டாம். என்னை வேண்டுமானால் வேலையைவிட்டு நீக்கிவிடுங்கள்" என்று பிடிவாதமாகப் பேசவே, மேலும் கோபமுற்ற அம்மங்கை "உண்மையைக் கூறு" என்று உரத்தக் கூவினாள். "எப்படிச் சொல்வேன் தேவி! என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நடனாவும் வீரமணியும் தங்கள் அன்புக்குப் பாத்திரமானவர்கள். நான் கூறுவதைக் கேட்டாலோ அவர்கள் இருவரையும் தூக்கு மேடைக்குத் தாங்கள் அனுப்புவீர்கள்" என்றாள் பாலா. அம்மங்கை மிரண்ட பார்வையுடன் நடனத்தை நோக்க, நடனம் நீர் வழியுங் கண்களுடன் "பாலா என்ன பழியையடி சுமத்தப் பார்க்கிறாய் கள்ளி காதகி!" என்று கூக்குரலிட்டு நின்றாள்.

"நானா கள்ளி! உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்யும் நீ உத்தமி. உன் கபடத்தை வெளிப்படுத்தப் போகும் நான் கள்ளி. கேள் தேவி! வீரமணியும் நடனமும் பேசிக்கொண்டிருந்ததை நான் மறைந்திருந்து கேட்டேன். குலோத்துங்கச் சோழன் பட்டத்துக்குரியவரல்லவாம். அவரைக் கவிழ்த்துவிட்டு பழைய மன்னரின் வார்சாக உள்ள வேறு யாருக்கோ பட்டம் சூட்டப்போகிறார்களாம். மணி இதற்காகவே படையிலே சேர்ந்து பக்குவமாக நடக்கிறாராம். இவள் அரண்மனையிலே இருப்பதும் இதற்குத் தானாம். இவர்களுக்கு உதவியாக ஊரிலே யாராரோ இருக்கிறார்களாம்" என்று பெரியதோர் பழியைப் பாலா சுமத்தினாள்.

"பேயே! நான் இதனைத் துளியும் நம்பமாட்டேன்" என்றாள் அரசிளங்குமரி.

"அதனை நானறிவேன் அம்மையே! நடனத்தின் நடிப்பு உங்களை ஏமாற்றி இருப்பதை நான் நன்கு அறிவேன். என் பேச்சை நம்பவேண்டாம். தயவு செய்து வீரமணி தந்தனுப்பினானே கிளி அதைப் போய்க் கேளுங்கள்" என்றுரைத்தாள் பாலா.

"பித்தமா இவளுக்கு? சதி என்றால் கிளி என்னுரைக்கிறாள். என்னடி சொல்லும் கிளி? சொன்னதைச் சொல்லும்" என்றாள் அம்மங்கை.

ஆமாம்! சொன்னதைத்தான் சொல்கிறது. வீரமணி சொல்லிக் கொடுத்ததைச் சொல்கிறது. அதைப் போய்க் கேளுங்கள் யார் என் மனைவி?" என்று, உடனே அம்மங்கை என் மனைவி என்று கூறும்; நடனாவின் உதவியைக்கொண்டு, வீரமணி சதி செய்து, அரசைக் கைப்பற்றித் தங்களையும் கைப்பற்றிவிடக் கனவு காண்கிறான். தனிமையில் கிளியுடன் பேசியிருக்கிறான்போல் தோன்றுகிறது. நான் அகஸ்மாத்தாய் இதைக் கண்டுபிடித்தேன்; கிளியை எடுத்துவரச் சொல்லுங்கள்" என்றாள்.

"விந்தையான பேச்சு! போடி கிளியை எடுத்துவா இப்படி" என்று ஒரு சேடிக்கு அம்மங்கை கட்டளையிட்டாள்.

ஓடிச்சென்ற தோழி, கிளியின் உடலைத்தான் எடுத்து வந்தாள். கிளி செத்துக்கிடந்தது.

"சரி! ஆரம்பமாய்விட்டது சதி! தேவி! நடனம் இதைக் கொன்றுவிட்டிருக்க வேண்டும். விஷயத்தை மறைக்கவே கிளியைக் கொன்றுவிட்டாள்" என்றாள் பாலா.

அம்மங்கை, ஓங்கிக் கங்காவின் கன்னத்தில் அறைந்து என் முன் நில்லாதே! ஓடு!! என் அருமைத் தோழியின் மீது வீணான விபரீதத்தைச் சாட்டினாய், கிளியை நீதான் கொன்றிருக்கவேண்டும். கிளியையுங் கொன்று கட்டுக் கதையையும் புனைந்து பேசுகிறாய், உங்கள் புராணத்திலே நடப்பதுபோலவே நீ நடந்துகொண்டாய். பொல்லாங்குக்காரி! நீ ஒரு பெண்; ஆகவே உன்னைத் துன்புறுத்தவில்லை... செய்ய எனக்கு

மன்ம் வரவில்லை; போய்விடு அரண்மனையை விட்டு" என்று கூறிவிட்டுத் தேம்பி நின்ற நடனத்தை அணைத்துக்கொண்டு "சீ முட்டாளே! எவளோ ஒருவள் ஏதோ சொன்னால் நான் நம்புவேனே! அவள் உறவே இனி நமக்கு வேண்டாம்; வா, நாம் போவோம்" என்று கூறி நடனத்தை அழைத்துக் கொண்டு அந்தப்புரம் போய்விட்டாள்.

கங்கா அழவில்லை! சிரித்தாள், விதை தூவி விட்டோம், அறுவடைக்குக் காலம் இருக்கிறது என்று மனதிற்குள் கூறிக்கொண்டு அரண்மனையை விட்டு வெளியேறி வெளியே நடந்தாள்.

* * *

கலிங்க நாட்டிலே கலக்கம் உண்டாகிவிட்டது. போர் தொடுக்கச்சோழன் கிளம்பினான் என்ற செய்தி கேட்டதும் ஒற்றர் ஓடோடி வந்து நடந்த வரலாற்றினைக் கூறி விட்டனர். தூதுவரும் போர் தொடுத்தாகிவிட்டதென்று ஓலை கொண்டுவந்து கொடுத்து விட்டனர், தமது மன்னன் வீணை விரோதத்தை வளர்த்துக்கொண்டதால், நாட்டிலே வேதனையே தாண்டவமாடப் போகிறதென்றுணர்ந்த மக்கள், கைபிசைந்து கொண்டனர். கண்களிலே மிரட்சி ஏற்பட்டுவிட்டது. போருக்குச் சித்தமாகப் படை பல இருந்தன. காட்டரண், கடலரண், மலையரண் ஆகியவைகளும் இருந்தன. ஆனால் மக்களின் மன அரண் இல்லை! மன்னனின் மமதை எனும் அரண் கிடந்தது. மதிகேடர்கள் கட்டிக்கொடுத்த மனக் கோட்டையிலே உலவிக் கொண்டிருந்தான் மன்னன்.

குலோத்துங்கனுக்கு உள்நாட்டிலேயே எதிர்ப்பு என்றும், பழைய மன்னரின் மகன் கட்சி ஒன்று இரகசியமாக வேலைசெய்து வருவதாகவும், அதனால் குலோத்துங்கனிடம் குடிபடைகளுக்கு வெறுப்பு வளர்ந்திருப்பதாகவும், வெளிநாட்டின் மீது போர் தொடுக்கவோ, தொடுத்தாலும் வெற்றிபெறவோ முடியாத நிலைமையிலே சோழ மன்னன் இருப்பதாகவும், சோழ மண்டலத்து ஆரியர்கள் கூறினர் என் கலிங்க நாட்டு ஆரியர் மன்னனிடம் கூறினர். மந்தமதியினன் அதனை நம்பினன்; வம்பை வரவேற்றான். போருக்குத் தானும் தயார் என்று பதில் ஓலை விடுத்தான், போரிட ஆயத்தமானன். சபையைக் கூட்டினன்.

"மந்திரிமார்களே! பிரதானியரே! படைத்தலைவர்களே! குலோத்துங்கன் இந்தக் குவலயமே தனக்குச் சொந்தமெனக் கூறுகிறான், பிறர்மீது பகை கொண்டு போரிடத் துணிகிறான். சோழன் சூரன்; நாம் கோழைகளல்ல! அவன் வீரன்; ஆனால் நாம் மண் பொம்மைகளல்ல! அவனிடம் படைகள் உள்ளனவாம்; ஆனால் நம்மிடம் உள்ளவை பதுமைகள் என்றெண்ணுவதோ! கரியும் பரியும் அதிகமாம்; அதற்காகக் கர்வமும் பேதமையும் மிகுவதோ! கலிங்கத்தின்மீது குலோத்துங்கன் போர் தொடுத்து விட்டான். நான் களம்புகச் சித்தமாகிவிட்டேன். உம்மைக் கலந்து ஆலோசிக்கவே இன்று சபை கூட்டினேன் என்று **அனந்த வன்மன்** கோபக்கனல் எழப் பேசித் தன் மீசையை முறுக்கினான். சபையிலே நிசப்தமாக இருந்தது. முதியவரான **எங்கராயன்** எனும் மந்திரியார் எழுந்து நின்று "மன்னவா! விந்தையான பேச்சு நிகழ்த்தினீர்! எம்மைக் கலந்தாலோசிக்கச் சபை கூட்டினீர் என்றீர்; ஆனால் களம்புக முடிவுசெய்துவிட்டேனென்கிறீர். முடிவு கட்டிய பிறகு கலந்தாலோசித்தல் முறையோ? எற்றுக்கு அது? என்ன பயன்? முடிவு செய்யும் அதிகாரம் முடிதரித்த உமக்குண்டு. ஆனால் கோடிக் கணக்கான மக்களுடைய வாழ்வைத் தாங்கள் பிடி சாம்பலாகக் கருதினீர். எனவேதான் போரிட முடிவு செய்து விட்டீர். பொதுமக்களிடையே ஏதேனும் புகல இன்று சபை கூட்டுகிறீர் நன்று, நன்று உமது நியாயம்" என்றுரைத்தனர்.

மன்னன்; "ஓய் மந்திரியாரே! வயோதிகம் உமது உடலை மட்டுமே வளைத்து விட்டதென்று எண்ணினேன்; உமது மதியும் வளைந்து விட்டதென்று விளக்குகிறீர். சோழனின் சொல்லம்பு என்னைத் துளைத்தது. இனி போர் எனும் கவசம் பூண்டாலொழிய நான் வாழ்வதெங்ஙனம்? அவன் போர் என்றதும் நான்பொறு என்பதா? அவன் 'வாள்' என்றதும், நான் கேள் தேவனே என்று முறையிட்டு மண்டியிடவா? என்னை நீர்மன்னனெனக் கருதாதது ராஜத்துவேஷம். அதை நான் மன்னிப்பேன். என்னைப் போரிடக் கூடாது என்றுரைப்பது என்னை மானமற்றவனெனக் கூறுவதாகும். அது என் ஆண்மையைப் பழிக்குங் குற்றமாகும். அதை நான் மன்னிக்க மாட்டேன். உமது உயிர் தித்திப்பானல் வீட்டிலே இரும்; வெள்ளாட்டியருடன் விளையாடும். வீரர் ஒருவர் இருவர் உடன் வரட்டும்; களம் புகுவேன் நான்" என்று மன்னன் கடிந்துரைக்கவே, மந்திரி சோகித்து "அரசே! ஆத்திரத்திற்குச் சாத்திரமில்லை. பிஞ்சில் பழுத்தது வெம்பிற்று

என்பர். வீரம்வேறு, வீம்புவேறு; அரசு எனும் சகடத்திலுள்ள நுகத்தடியை ஒரு பக்கம் மன்னன் மற்றோர் பக்கம் மந்திரிகள் தாங்கி இழுத்தல் வேண்டும் என்று ஆன்றோர் கூறுவர். மன்னா! காய்வதிலே கடுகத்தனையும் பயன் காண்பதற்கு இல்லை. கிழட்டுக் கோழையாக இதோ என்னைத் தாங்கள் கூறிவிட்டீர்கள். பதட்டமிக்க பாலகனே! என்று தங்களை நான்கூறமுடியாது. தாங்கள் மன்னர் என்ற காரணத்தால். ஒன்று கூறுவேன் அரசு எனும் எந்திரத்திற்கு மந்திரிகளே கண்கள்; மக்களே தாள்கள்; தோழரே தோள்கள்; ஒற்றரே செவிகள் என்று மேலோர் கூறுவர்" என்று சாந்தமாகவே கூறினார்.

"ஆம்! அந்தக் கண்களிலே சில மங்கிவிட்டன. அரசே! போர் புரியச் சித்தமான உமது வீரத்தைச் சபை வரவேற்கிறது! கலிங்கம் வரவேற்கிறது, வீரர் வரவேற்கின்றனர்!" என்று கூறிக்கொண்டே திசைமுகன் எனும் மந்திரி எழுந்து நின்றான். மலர்ந்த முகத்துடன் மன்னன் அவனை நோக்கி "சபாஷ்! நன்று! இஃதன்றோ நான் கேட்க விரும்பியது" என்று புகழ்ந்துரைத்தான்.

"குலோத்துங்கனின் படைகள் பூங்காவுக்குள் புகுவதுபோல் இங்கு வந்து சேருமோ! இடையே பாலாறு, குசைத்தலை, முகரி, கொல்லி, பெண்ணை வயலாறு, மண்ணாறு, பேராறு, கோதாவரி, கம்பை, கோதமை ஆகிய பல நதிகளைக் கடக்கவேண்டும். கலிங்கத்தின் மீது பாயுமுன் அந்தப் படைகள் களைத்துப்போகும். ஆகவே, அவைகளை முறியடித்தல் எளிது என்பேன். மேலும் சோழ மண்டலம் சுபிட்சமாக இருக்கிறது என்பதைப் பற்றிப் பெருமையாகப் பேசப்படுகிறது. அரசே! அந்தச் சுபிட்சமே போர்த்திறனை மாய்த்து விட்டிருக்கும், மங்கச்செய்தாவதிருக்கும். எனவே சோழனின் சூரப்புலிகளுக்குக் கலிங்கம் அஞ்சத் தேவையில்லை. அஞ்சுவோருக்கு நாம் வளைகள் பரிசு தருவோம்! வாளேந்தும் கரங்களுக்குக் கலிங்கத்தில் பஞ்சமில்லை" என்று திசைமுகன் பேசினான்.

துடுக்குத்தனமான அவனது பேச்சுக்குச் சபையிலே பலர் சபாஷ் கூறினர். போர் கூடாது என்று வாதிட்ட எங்கராயன் எனும் மந்திரியாரின் மதிவழி செல்ல மன்னன் மறுத்துவிட்டான். மதங்கொண்ட யானைபோல் ஆர்ப்பரித்தான். நெருப்புப் பொறி எத்துணைச் சிறிதாயினும் அது தங்க இடங்கிடைத்து விட்டால், தங்குமிடத்தை அழித்தொழிக்கும் வகைபோல் கலிங்க மன்னனின் கெடுமதி எனும் சிறு தீப்பொறி தங்க இடமளித்ததால் கலிங்கமே அழியும் நிலையைப் பெறவேண்டியதாயிற்று.

"குலோத்துங்க மன்னனுக்கு நான் எளியவனாக இருக்கலாம், திசைமுகா! அவன் ஏவும் படைகளுக்குமா எளியனானேன்?" என்று கலிங்க மன்னன் கடுப்புடன் கேட்டான். "மன்னவா! மாற்றாருக்கு நமது வலிமையைக் காட்டச் சந்தர்ப்பமின்றி வாடினேன். வெற்றி மாலையைத் தங்கட்கு விரைவில் தருவேன். ஏன்? சோழனின் சுந்தரகுமாரி அம்மங்கையின் கரத்தையும் தர இயலும்; சோகம்விடுக! உறுதியுடன் நமது படைகள் போரிடும். புதுப்புது ஆயுதங்கள் குவித்துள்ளேன். ஆயுத ஒளியே சோழனின் படைவீரரின் கண்களை கூசவைக்கும்" என்று கூறினான் திசைமுகன். சாந்தம் போதித்த எங்கராயன், "ஏனப்பா திசைமுகா! நீ புது ஆயுதங்களைப் பற்றிப் பூரிப்புடன் பேசுகிறாய். உன் பேதமையை என்னென்பேன்! சோழ நாட்டிலே படைக்கலங்கள் மிகப் பழையன! புதியனவன்று! ஒளி இழந்தன, வளைந்தன. இன்று அவைகளை உலைக்கூடங்களிலே காய்ச்சியும் தட்டியும், நீட்டியும், மடக்கியும் சரி செய்துகொண்டிருப்பார்கள். புதுப் படைக்கலன்கள் உன்னிடம் போரறியாக் காரணத்தால், பழைய ஆயுதம், அங்கு போரிட்டுப் போரிட்டுப் பழகியதால்! உன் ஆயுதம் ஒளி உள்ளன; உறையிட்டுக் கிடந்ததால், அவர்களின் ஆயுதங்கள் எதிரியின் உடலைக் கீறி இரத்தத்தில் இறங்கி, கரியை துண்டித்துப் பரியைச் சிதைத்து, ஒளி இழந்தும் வளைந்தும் போயினவே. பளபளப்பான ஆயுதம் உள்ளவனே! வந்த ஆயுதக்காரன் வலிமைமிக்கான், போரிலே புரண்டெழுந்தவன் என்பதையன்றோ அவனது படைக்கலங்கள் காட்டுகின்றன. உனது ஆயுதம் பளபளப்பு! குலோத்துங்கனுக்கோ கீர்த்தி ஒளி விட்டு வீசுகிறது! வீரன் உடலில் பல வடுக்கள் உள்ளன! வீம்புக்காரனுக்கு வடு இராது. முன்னவன் போர்க்களம் புகுந்தவன் என்பதன் அத்தாட்சி அந்த வடுக்கள், போகப்புரட்டன் என்பதற்கு அத்தாட்சி வடுவற்ற வடிவமாக அவனிருத்தல். கலிங்கத்தின் நிலையை உன் கர்வம் எனும் அளவுகோல் கொண்டு அளக்கிறாய்" என்று கண்டித்தார். மன்னன் வெகுண்டு. "நீ கலிங்க நாட்டு மந்திரியா? சோழனின் ஒற்றரா? என்று கேட்டுக் கொதித்தான். ஆனால் அந்தச் சமயத்தில் அவன் சிந்தையை மருட்டிடும் சம்பவம் நடந்தது. ஓடோடி வந்த வேலையாள் ஒருவன், "அரசே! வீரமணி என்ற குதிரைப்படைத் தலைவன் நதிகளைக் கடந்துவிட்டான். கலிங்கத்தின் எல்லையிலே அவனது குதிரைப் படை புகுந்துவிட்டது" என்ற செய்தியைக் கூறினான். மன்னன் திசைமுகனைப் பார்த்தான்; திசைமுகன் திக்கெட்டும் மாறிமாறி நோக்கியபடி நின்றான்.

"மலைக்காதே மன்னா! வீரமணி குதிரைப்படையுடன் வரட்டும். ரமணிபோல், அவன்ரணகளத்தை விட்டு ஓடும்படிச் செய்ய நமது படைகளை ஏவுகிறேன். சளைக்காதே; சமரிலே சங்கடங்கள் நேரிடுவது சகஜந்தான்; ஆனால் சோழனின் சைன்யத்தை நமது வீரமெனும் சண்டமாருதத்தால் அழித்தொழிப்போம், இளிக்காதே எங்கராயா! திசைமுகனின் தீர்மானம், இலேசென்று எண்ணாதே. நிற்காதே காவற்காரனே! ஓடிச்சென்று, என் உத்திரவை படைத்தலைவர்களிடம் கூறு, முரசுகொட்டு! தோள்தட்டு! வாள் வீசு! வாகை தேடு!" என்று வெறிபிடித்தவன்போல் திசைமுகன், மன்னனைப் பார்த்து ஓர்மொழியும், மதியுரைத்த மந்திரியைப் பார்த்து ஓர் மொழியும், வேலையாட்களைப் பார்த்து வேறோர் மொழியுமாகப் பேசினான்.



குறையும்-நிறையும்

இந்தப் பகுதி, இனி கிழமை தோறும் தொடர்ந்து வெளிவரும். மிகுதிக்கண் இடித்தல் என்றகுறட்பா இயல்புப்படி இவற்றைப் பிரசுரிக்கிறோம். கடிதங்கள், சுருக்கமாக, தெளிவாக, காகிதத்தின் ஒரே பக்கத்தில் முழு முகவரியுடன் எழுதப்பட வேண்டும், கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

"குறையும்—நிறையும்" பகுதி,
"காஞ்சி"
66, திருக்கச்சிநம்பித் தெரு,
காஞ்சிபுரம்-8.

'காஞ்சி' ஆசிரியர் அவர்களுக்கு,

ஐயா நான் சென்னையில் ஒரு நிறுவனத்தில் டிராவலிங் ஏஜெண்டாகப் பணியாற்றுகிறேன். இதனுல் அடிக்கடி பஸ் பயணம் மேற்கொள்ளவேண்டிய கடமை எனக்குண்டு. இந்த அனுபவத்திலிருந்து தமிழக அரசின் போக்குவரத்துத்துறைஅதிகாரிகளின்அலட்சியப் போக்குபற்றி அறிய முடிகிறது. பஸ்களில். எத்தனைப் பயணிகளைத்தான் ஏற்றலாம் என்று கணக்கு இருக்கிறது. தங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற பயணிகளின் எண்ணிக்கையைவிட, அதிகமாக (Over Load) பயணிகளை ஏற்றிக்கொண்டு, மூவர் அமரும் இடங்களில் நால்வரை அமரச் செய்கின்றனர். நிற்கும் பயணிகள் வேறு. பயணிகளுக்கு இது எவ்வளவு பெரிய தண்டனை! அரசாங்கத்துக்கு இது எவ்வளவு பெரிய இழப்பு! குறிப்பிட்ட ஒரு கம்பெனி மட்டுமல்ல. ஏறத்தாழ பெரும்பான்மையான இடங்களில் இப்படி நடைபெறுவதனை அனுபவரீதியாகவே உணர்கிறேன். அத்துடன், உதாரணத்துக்குச் சொல்கிறேன்—சென்னையிலிருந்து காஞ்சிபுரத்துக்கு ரூ. 1-40 என்று கட்டணம் இருக்கிறபோது, கூட்டம் அதிகமாக இருந்தால், தனியார் பஸ்களில்கூட ரூ. 2 வரையில் டிக்கெட் வசூலிக்கிருர்கள். இவைகளில் ஓவர் லோடு ஏற்றும் போது பயண டிக்கெட்டுக்கூட பல சந்தர்ப்பங்களில் தரப்படுவதில்லை. எனவே, தமிழக அரசின் போக்குவரத்துத்துறை அதிகாரிகள் இந்த ஒழுக்கக்கேட்டைக் கவனித்து ஒழுங்குபடுத்த முனைவார்களா?

இரா. சாம்பசிவம்,
சென்னை.

• • •

ஆசிரியர் அவர்களுக்கு,

நியூயார்க் நகரத்தில் நடைபெறும் பருத்தி பேர விற்பனை, நம் நாட்டில் சூதாட்டமாக மாறி, கோர நர்த்தனமாடிக் கொண்டிருக்கிற விவரத்தை போலீஸ் இலாகா புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறதா? அல்லது, துணைபோய்க் கொண்டிருக்கிறதா என்று சந்தேகம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. குறிப்பாக காஞ்சிபுரத்தையே எடுத்துக் காட்டுகிறேன். இந்தச் சூதாட்டம், தெருவுக்குத் தெரு. மூலைக்கு மூலை சர்வ சாதாரணமாக ஆகிவிட்டிருக்கிறது. இது தடுக்கப்பட்டு சட்டமும் செயலில் இருக்கிறபோது, மறைமுகமாய் இருந்து தொலைத்த இந்தக் கேடு. பகிரங்கமாய் ஆகிவிட்டதற்குக் காரணம் என்ன? போலீசுத் துறை. தக்க நடவடிக்கை எடுக்குமா?

மோகனரங்கம்.
காஞ்சிபுரம்.

• • •

ஐயா,

நம் நாட்டில் வேலை தேடித்தரும் நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள் என்றே நம்புகிறேன், இந்த நிறுவனம்வேலையில்லாத ஏழைகளுக்குத்தான் வேலை தேடித்தருகிறதா? அல்லது வேலையே செய்யவேண்டிய அவசியத்திலில்லாத பணக்காரர்களுக்கு வேலை தேடித்தருகிறதா? என்றே புரிந்துகொள்ள முடியவில்லை நான் மேற்படி நிறுவனத்தில் என் பெயரைப் பதிவு செய்துவைத்து நான்கு ஆண்டுகள் கழிந்துவிட்டன. மூன்று மாதத்திற்கு ஒருமுறை தவருமல் பெயரைப் புதுப்பித்துக்கொண்டும் வருகிறேன். எனக்குப் பின் பதிவு செய்துகொண்ட எனக்குத் தெரிந்த சிலர், வசதி படைத்தோர் அரசுத் துறைக்கும், தனியார்துறைக்குமாக வேலையில் சேர்ந்திருப்பதைக்கண்டு பொருமைப்படத்தான் முடிகிறது. ஒரு அரசு அலுவலகத்தில் பியூன் வேலை காலி இருக்கிறதென்பதை அறிந்து பெரிய மனிதர் ஒருவரது சிபார்சுடன், உரிய அதிகாரியைச் சந்தித்தேன். அந்த அதிகாரி, எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலம் வந்தால்தான் அது சாத்தியம் என்றும், இப்போது அந்த ஸ்தாபனத்திடம் ஆட்கள் வேண்டும் எனக் கேட்டிருப்பதாகவும், அந்த லிஸ்டில் என் பெயரும் வந்தால், தனக்கு அலுவல் தருவதாகவும் கூறினர். நான் ஓடோடிச் சென்று, இது தொடர்பானவர்களிடம் தொடர்புகொண்டு விசாரிக்கும்போது உரிய பதில் கிடைக்கவில்லை. தொங்கிய முகத்துடன் அங்கிருந்து திரும்பும்போது. ஒருவர் சொன்ஞர்; என் தம்பியின் நிலையும் இதுதான். யாரோ சொன்ஞர்கள் பெயரை, உரிய நிறுவனத்துக்கு ஒருமுறை அனுப்புவதானுல் ரூ. 25- கொடுக்க வேண்டுமென்றும், மூன்று முறை அனுப்புவதானுல் 50 ரூபாய் கொடுக்கவேண்டும் என்றும், அப்படிக் கொடுத்தால் நிச்சயம் நடக்கும் என்றும் தன்னிடம் யாரோ ஒருவர் தெரிவித்தாராம். நாஅ இங்குவந்து சுற்றிச் சுற்றி வருகிறேன். இந்த விஷயத்தை யாரிடம், எப்படிக் கேட்பது என்பதுகூட புரியவில்லை என்றும் அங்கலாய்த்துக் கொண்டார். அவர் கொண்டுவந்த அளவுக்குப் பணம் என்னிடம் இல்லை. திரும்பி ஊர் வந்து சேரவேண்டுமானுல் கூட பகல் பட்டினி கிடக்கவேண்டும். எனவே திரும்பிவிட்டேன் பெயரும் வரவில்லை; வேலையும் கிடைக்கவில்லை எனவே, இதுபோன்ற நிறுவனங்கள் ஏழைகளுக்குப் பயன்படுகிறதா என்கிற வகையில் தொடர்புடைய அதிகாரிகளும், அமைச்சரும் உரிய கவனம் எடுத்துக் கொண்டால்தான் நல்லது. எடுத்துக்கொள்வார்கள்என்றும், அதற்குக் 'காஞ்சி' உதவி புரியும் என்றும் நம்புகிறேன்.

எஸ். பரந்தாமன்,
மதுராந்தகம்.

★

மாறியது நெஞ்சம்

ஏ. வி. கிரி

வாழ்க்கையே வெறுத்தது சந்திரனுக்கு.

பௌர்ணமியன்று கடல் பொங்குமே—அதைப்போலப் பொங்கியது அவன் உள்ளம்.

குழந்தை ஆவலுடன் வாங்கிய மிட்டாய் வாயில் வைப்பதற்கு முன்னாலேயே கீழே விழுந்து மண் ஒட்டிக்கொண்டால் எப்படி அந்தப் பிஞ்சு மனம் துடிக்குமோ? அதே ஏமாற்றம்தான் சந்திரனின் முகத்திலும் படிவியிருந்தது.

சிறுவயதில் மண் வீடு கட்டி சிட்டுக் குருவிகளைப்போல் சிறகடித்துப் பறந்து துள்ளி விளையாடியபோதும், கைகோர்த்து சிரித்து மகிழ்ந்து பேசியபடி இணைபிரியாமல் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தபோதும், உற்றார் உறவினர் இன்னும் எத்தனையோ பேர் சொன்னார்கள்—"ரேவதி உனக்குத்தான் சொந்தம்," என்று

அந்த அறியாப் பருவத்தில் அதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கும் ஆற்றல் இல்லை. இப்போது இந்த அறியும் பருவத்தில், அங்கமெல்லாம் தங்கமுலாம் ஒன்று திரண்டு நடமாடும் எழிலரசியாய் விளங்கிய ரேவதி அவனைக் கண்டவுடன் கன்னமெல்லாம் சிவக்க சிரித்த முகத்துடன் ஓடி மறைந்து விடுவதைப் பார்த்து வேறு யாரும் சொல்லவில்லை சந்திரனே சொன்னான்:

"ரேவதி எனக்குதான் சொந்தம்"

ரேவதி மாற்றான் தோட்டத்து மல்லிகையோ எட்டாப்பழமோ அல்ல. சொந்தத் தாய் மாமனின் ஒரே தவப்புதல்வி. உரிமைகொண்டாடவேண்டிய முறைப் பெண். அவனைவிட அதிகமாக ஒருவருடம் கல்லூரியில் காலடி வைத்துத் திரும்பியிருக்கிறாள்.

அழகிலும் மற்ற எல்லா விதத்திலும் சந்திரன் ரேவதியை மணக்கத் தகுதியுள்ளவன்தான் — ஒன்றைத் தவிர!

அதுதான் உலகையே ஆட்டிப் படைக்கும்—பணம்.

ரேவதி குடும்பத்தைப்போல அதிக வசதி படைத்தவனல்ல சந்திரன். ஏதோ பூர்வீக சொத்து கொஞ்சம் இருக்கிறது. அதிலிருந்து வரும் வருமானம்தான்குடும்பத்தைக் காப்பாற்றுகிறது. ஒரே மகனைக்கூட வாலிபத் தோற்றத்தில் பார்க்கக் கொடுத்து வைக்காமல் அவன் தந்தை சிறு வயதிலேயே இறந்து விட்டார். எத்தனையோ உறவினர்கள் வசதியுடன் இருந்தும் யாரிடமும் எதுவும் கேளாமலே சந்திரனை வளர்த்து ஆளாக்கிவிட்டாள் அவன் தாய். ரேவதியைக்கூட அவனுக்குச் செய்யவேண்டுமென்று உள்ளுக்குள் அவளுக்கும் ஆசைதான். சொந்த அண்ணன்தான் என்றாலும் பெண் கொடு என்று கேட்கும்போது இல்லையென்று மறுத்துவிட்டால்? அதைவிட வேறு அவமானம் வேண்டுமா? அதைவிட கேட்காமலிருப்பதே மேல்! — அந்தத் தாயுள்ளத்தில் நீண்ட நாட்களாகவே இப்படியொரு தயக்கம்.

அதை உறுதிப்படுத்துவதுபோல, "ரேவதிக்குப் பெரிய இடத்தில் மாப்பிள்ளை தேடுகிறார்கள்" என்ற விஷயம் தெரியவந்தது. சரி! நம் அந்தஸ்துக்குத் தகுந்த பெண்ணைப் பார்த்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்தாள். ஆனால் சந்திரன் துடித்தான்.

"நான் இருக்கும்போது வேறு எவன் ரேவதிக்கு மாப்பிள்ளையாக வருவது? இப்போதே போய் இரண்டில் ஒன்று கேட்டுவிட்டு வந்து விடுகிறேன்" என்று கிளம்பினான் தாய் தடுத்தும் கேளாமல்.

திருமணத்தைப்பற்றி பேச ஆரம்பித்ததும்—

"அய்யா வெட்டி முறிக்கிறது அதிகம், துரை கலெக்டர் வேலை பார்க்கிறாரு... இவருக்குக்கல்யாணம் ஒன்றுதான் இப்போ ரொம்ப அவசரம். போடா தடிப்பயலே. வேலை வெட்டி இல்லாமே கோயில் மாடு மாதிரி ஊரைச் சுத்தறே உனக்கு பெண்ணு இல்லாததுதான் குறைச்சல். வெள்ளையா டிரஸ் பண்ணிக்கிட்டு ஊரை பவனிவந்தா மட்டும் போதாதுடா. வருமானத்துக்கு முதலில் வழியைப் பாரு. அப்புறம் கல்யாணத்தைப்பத்தி பேசலாம்."

எப்போதும் இதைப்போல் கொஞ்சம் வேடிக்கையாகத்தான் அவனிடம் பேசுவார் அவன் மாமா. ஆனால் அன்று மட்டும் கொஞ்சம் கண்டிப்புடனே பேசினார். அது சுருக்கென்றது சந்திரனுக்கு.

வேறொரு சமயமாயிருந்தால் விட்டுக்கொடுக்காமல் சிரித்துக் கொண்டே பதில் சொல்வான்—

"நீங்க மட்டும் என்ன மாமா? சுயமாவா சம்பாதிச்சீங்க! எங்க தாத்தா கஷ்டப்பட்டு சேர்த்து வைச்ச சொத்திலே இப்போ நீங்க சுகமா காலந்தள்றீங்க! அதிலும் பாதியைக்கூட காணோம்!"

—இப்படி கேட்கக்கூடிய மனநிலையில் அப்போது அவன் இல்லை.

"போய்யா நீயுமாச்சி உன் பெண்ணுமாச்சு" ஆத்திரத்தில் சூடாகக் கேட்டிருப்பான். எப்படியோ கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். "போய் வருகிறேன்" என்றுகூடச் சொல்லிக்கொள்ளாமல் வேகமாக வெளியேறினான்.

நாலடி தூரந்தான் நடந்திருப்பான். முகத்தில விர்ரென்று ஏதோ ஒன்று வந்து விழுந்தது. குனிந்து எடுத்தான் அழகான ஒரு ரோஜாப் பூ.

ரேவதி கலகலவென்று நகைத்தபடி அவன் அருகில் வந்தாள். சந்திரன் முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

"அடேயப்பா! அத்தானுக்கு எவ்வளவு கோபம்?" அவனுக்கு வழி விடாமல் எதிரே நின்றாள்.

"வழியை விடு ரேவதி. உன்னுடன் நான் பேசத்தயாராயில்லை."

"என்ன அத்தான் குழந்தைமாதிரி கோபித்துக்கொள்கிறீர்கள். உங்கள் நன்மைக்குத்தானே அப்பா சொன்னார். நமக்குக் கல்யாணம் ஆனால் குடும்பம் நடத்த வசதி வேண்டாமா? அதற்குத்தான் யாருடைய

தயவையும் எதிர்பார்க்காமல் சொந்தமாக ஏதாவது ஒரு தொழில் ஆரம்பியுங்கள்.''

"கஞ்சி போட்டாவது உன்னை என்னால் காப்பாற்ற முடியும் ரேவதி. ஆனால் நீ நினைப்பதைப்போல மாடி வீடும் பாலும் பழமும் பஞ்சுமெத்தையும் கிடைக்காது. அன்பைத்தான் என்னாலே கொடுக்க முடியுமே யொழிய உல்லாசசுகத்தைகொடுக்க முடியாது. உன் அப்பாவிடம் இருக்கிற பணத்துக்காக உன்னை நான் காதலிக்கவில்லை. அந்தப் பணம் என் கால் தூசுக்குச்சமம். பணமிருந்தாலும் குணம் மாற மாட்டீங்கன்னு நினைச்சு வந்தேன். ஆனால் உங்க புத்தியைக் காட்டிட்டீங்க.

ஒன்னு மட்டும் சொல்றேன் ரேவதி...பணம் காற்று மாதிரி. நிலையாயிருக்காது. எந்தப் பக்கம் வேண்டுமானாலும் அடிக்கும். நான் வர்ரேன். உனக்கு முன்னே எனக்கு கல்யாணம் நடக்குதா இல்லையான்னு பாரு.''

'அத்தான்' ரேவதியின் அலறலை அவன் பொருட்படுத்தவில்லை. எரிமலையாய்க் குமுறியது அவன் உள்ளம்.

"யாருடைய தயவையும்......''—இதற்கு என்ன அர்த்தம்?

''என்னைக் கல்யாணம் செய்து கொள்வதின்மூலம் என் சொத்தை அடைய முயலாதீர்கள்......'' என்பதா?

சே! என்ன உலகம்!

வெந்த புண்ணில் வெந்நீரைக் கொட்டியதைப்போலிருந்தது ரேவதியின் பேச்சு!

எத்தனை இன்பக் கனவுகள் ஆசைகள் ... எண்ணங்கள்......எல்லாம் கண்முன்னே விழுந்து தூளாயின. அவன் கண் கலங்கியது ஆனால் இதயந்தான் அழுதது.

புறப்பட்டு வரும்போதே அம்மா சொன்னாள்:

"போகாதேடா சந்திரா. அவமானப்பட்டுதான் வரணும். என்னதான் நெருங்கிய சொந்தமாயிருந்தாலும் இந்தக் காலத்தில் பணம் இருந்தால்தாண்டா மதிப்பு. நமக்கு பெரிய இடத்து சம்பந்தம் வேண்டாம். நேற்று முதுகரையிலே ஒரு பெண்ணைப் பார்த்தேன். பெண் லட்சுமி மாதிரி இருக்கிறாள். நல்ல குடும்பம். நீ சரின்னு சொன்னால் சித்திரையிலே..........அவங்களுக்கு முன்னே பிரமாதமா நடத்திடலாம்...''

அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல் ஓடோடி வந்தான்—ரேவதிமேல் வைத்திருந்த நம்பிக்கையினால்—இல்லை காதலால்!

வந்த இடத்திலோ...!

• • •

"என்னப்பா சந்திரா. எங்கே ஆளையே காணோம். உன்னைத்தான் தேடிக்கொண்டு வந்தேன். வீட்டில் கேட்டேன். நீ மாமா வீட்டுக்குப் போயிருப்பதாக அம்மா சொன்னார்கள். உனக்கென்னப்பா. கொடுத்து வைச்சவன். மாடி வீட்டு மாப்பிள்ளை...''

நெருங்கிய நண்பன் சத்தியமூர்த்தி வழி மறித்தான்.

"என்னடா சந்திரா ஏன் முகம் ஒரு மாதிரியிருக்கு...ரேவதி ஏதாவது ......'' கிண்டலாகக் கேட்டான்.

"ஒன்று மில்லையடா, என்ன விஷயம். ஏன் என்னைத் தேடினே?''

"ஒரு சின்ன உதவி. உன்னைத்தான் நம்பிவந்தேன். பத்து ரூபாய் பணம் இருந்தால் கொடு. மெட்ராஸ் போய்வந்து கொடுத்துவிடுகிறேன். இன்னைக்குஞாயிற்றுக்கிழமை. கடையெல்லாம் மூடியிருக்கு. அதனால் எங்கும் பணம் வாங்க முடியலே...''

"என்னடா அவ்வளவு அவசரமாய் மெட்ராசுக்கு''

"வந்த பிறகு அதைப்பற்றி சொல்றேன். அதில் ஏதாவது கிடைத்தால் கட்டாயம் உனக்கும் பாதி.''

"பாதியும் வேண்டாம். முழுதும் வேண்டாம். ஆளைப் போகவிடு...'' பாக்கெட்டைப்பார்த்தான். ஒரே ஒரு பத்து ரூபாய்த்தாள்தான் இருந்தது. எடுத்துக்கொடுத்தான்.

"டேய்நாளைக்கு அவசியம் இந்தப் பணம் வேணும். வயலுக்கு உரம் வாங்கணும்.'' சொல்லிக்கொடுத்தான்.

வீட்டிற்குள் நுழைந்ததும்—

"உன் பேச்சைக் கேட்காமலே போனது தப்பும்மா. நீசொன்னபடியேதான் நடந்தது. இனி அவுங்க உறவே நமக்கு வேண்டாம். முதுகரையிலே பார்த்த அந்தப் பெண்ணையே முடிச்சிடு.''

சந்திரன் திரும்பிவந்து இப்படித்தான் சொல்வான் என்று போகும் போதே அவளுக்குத்தெரியும். அவனுக்கு முன் பிறந்து வளர்ந்து அனுபவப்பட்டவளல்லவா?

மறுநாள் திருமண ஏற்பாடுகள் வேகமாக நடந்தன. பகல் மணி இரண்டு இருக்கும். மெட்ராசிலிருந்து திரும்பிய சத்தியமூர்த்தி சந்திரனைத் தேடி ஒரே ஓட்டமாய் ஓடி வந்தான். தூங்கிக்கொண்டிருந்த சந்திரனை தலைக்கு மேல் தூக்கிக்கொண்டு மகிழ்ச்சிக் கூத்தாடினான். அங்கிருந்தவர்களுக்கு எதுவும் புரியவில்லை. அதைவிடப் பெரிய அதிர்ச்சி அடுத்து அவன் செய்தது...

கையில் கொண்டு வந்த தோல் பையை மேஜைமேல் கொட்டினான். யாரும் அதை எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியடைந்து பிரமிப்பால் வாயடைத்துச் சிலையாக நின்றுவிட்டார்கள்.

புத்தம் புது கரன்சி நோட்டுக்கள் சிறுகுன்றுபோல் மேசைமேல் சிதறிக் கிடந்தன.

சந்திரன் சத்தியமூர்த்தியைப் பார்த்தான், இவன் கண்களில் திகைப்பு கரம் கோர்த்து நின்றது. சத்தியமூர்த்தி கலகலவென்று சிரித்தான்.

"என்னடா அப்படிப் பார்க்கிறே...கொள்ளையடிச்சிட்டு வர்ரேனு பயப்படறியா......உனக்குக் கூடத் தெரியுமே சந்திரா நான் அடிக்கடி ரேசுக்குப் போவேன். வாரந்தவறாமல் இப்போ ஜாக்பாட்டுக்குப்போய் வந்து கொண்டிருந்தேன். வாராவாரம் பணம் கையைவிட்டுப் போனதுதான் மிச்சம். இந்த வாரம் கட்டாயம் போகணும்னு எனக்குள்ளே ஒரே வெறி. ஆனா பணம் எங்கும் கிடைக்கலை. கடைசியில் நீ கொடுத்தாய். அப்பவே நினைத்துக் கொண்டேன்—தப்பித்தவறி ஏதாவது கிடைச்சா உனக்குப் பாதி கொடுத்திடவேண்டும் என்று!

இந்த ரேஸில் நான் வாங்கின அஞ்சு டிக்கட்டிலே நாலுதான் கரெக்டா வந்தது. யாருமே அஞ்சு நம்பரையும் சரியா எடுக்கலை. இப்பத்தான் ரேஸ்கிளப் சட்டதிட்டத்தை எல்லாம் மாத்திட்டாங்களே...அதனாலே நாலு நம்பர் கரெக்டா வாங்கியிருந்த மூனு பேருக்கு நாலரை லட்ச ரூபாயைப் பங்கு போட்டுக் கொடுத்திட்டாங்க, அதிலே நான் ஒண்ணு...''

எல்லோருக்கும் ஆச்சரியமாயிருந்தது. சத்தியமூர்த்தியே தொடர்ந்தான்.

"உன் பங்கு எழுபத்தையாயிரம் ரூபாயைக் கொடுக்கத்தான் இப்போ வந்தேன்.

'உனக்கென்ன பைத்தியமா...... நீயே எல்லாப் பணத்தையும் வைத்துக்கொள்வதுதானே?' — இந்த மாதிரிகூட சிலர் கேட்கலாம். ஆனா

(12-ம் பக்கம் பார்க்க)

தலைகுனிவைத் தருகின்ற தலைக்கணக்கு

—மலையமான்—

உலகில் இரண்டாவது 'பெரிய' ஜனநாயக நாடு, இந்தியா! இன்று அதன் ஜனநாயகம் சோதனைக்குள்ளாகியிருக்கிறது.

சோதனை நடந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்திய ஜனநாயகம் அச்சோதனையில் வெற்றி பெற்றுத் தழைக்குமா வேரோடு சாயுமா என்பதைச் சொல்ல முடியாது.

கடந்த இருபதாண்டுக் காலமாக ஒரே ஒரு கட்சி மாபெரும் வல்லமையோடு இருந்து நாடாண்டது அப்படி இருக்கக்கூடாது; மக்களாட்சி என்பதும் கட்சி அரசியல் என்பதும் அப்படியல்ல, ஒரே கட்சி பலகாலம் ஆட்சியிலே இருந்தால் அதன் போக்கிலே சர்வாதிகாரம் விளைந்துவிடும் என்று அரசு நூல் வல்லவர் எல்லாம் எச்சரித்தும் இந்த நாட்டு மக்கள் அதைக் காதிலே போட்டுக்கொள்ளவில்லை. 'அவர்கள் ஏதோ தங்கள் சொந்த இலாப நட்டத்துக்காக அப்படிச் சொல்கிறார்கள்' என்று மக்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாமலே இருந்தார்கள். அறியாமையும் கல்லாமையும் வறுமையும் மிகுந்த இந்த நாட்டில் இருபத்தொரு வயதுவந்த எவருக்கும் வாக்குரிமை என்று மக்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை ஜனநாயக உரிமையே, 'குருவி தலையிலே வைக்கப்பட்ட பனங்காயாகி' விட்டது!

கடந்த சில காலமாகப் பல அறிவாளிகள் எடுத்துக் காட்டியும் சரியான : எதிர்க்கட்சியை மாநிலத்திலும், மத்தியிலும் வளர்க்கத் தயங்கிய மக்கள் கடந்த '67-லே மாநிலங்களிலே மட்டும் எதிர்க்கட்சிகளை உருவாக்கவில்லை—அல்லது உருவாக்கவில்லை. இந்த '67-லும் மக்கள் இருபதாண்டுகள் ஆண்டு சலித்த அதே கட்சிக்குப் பெருமையும் பெரும்பான்மையும் கொடுத்து நாடாளும் உரிமையை வழங்கினர்.

இருபதாண்டுகளாக ஆண்டு ஆண்டு சலித்த அந்தக் கட்சியினர் அந்தப் பெருமையைக் காத்துக் கொள்ளக் காணோம். மக்கள் திரும்பத் திரும்ப அந்தப் பெருமையை அவர்களுக்கே அளித்ததனால் அவர்களுக்குச் சலித்துவிட்டது. எனவே அதனை அவர்கள் எதிர்க்கட்சியினரிடத்திலே ஒப்படைத்துவிடத் துடிக்கின்றனர்.

ஆனால் 'ஊழ்வலியின்' காரணமாக எதிர்க்கட்சியினர் அதனை ஏற்றுக் கொள்ளும் அளவுக்குத் தங்களைத் தயார்செய்து கொண்டில்லை. அவர்கள் இப்படியொரு நிலையை—மக்கள் அளித்த தீர்ப்பை ஆளுங் கட்சியினர் மதித்து நடந்து கொள்ளாத ஒரு நிலையை—எதிர்பார்க்கவே இல்லை. அப்படியே அவர்கள் எதிர்பார்த்திருந்தாலும் மக்களை அப்படி எதிர்பார்க்கச் செய்யும் கடின உழைப்பில் வெற்றிபெற்றிருக்கவில்லை.

அதனாலேதான் ஆரம்பத்திலேயே இந்தியாவின் ஜனநாயகம் சோதனைக்குள்ளாகியிருக்கிறது என்று சொன்னோம்.

ஒருநாட்டில் ஜனநாயகம்—மக்களாட்சி இருக்கிறது என்று சொன்னால் ஆளுங்கட்சித் தவறு செய்கிற நேரத்தில், அல்லது தனக்குள்ளே பிளவுபட்டுத் தன் பெரும்பான்மையைத் தொலைத்துவிடுகிற நேரத்தில் எதிர்க்கட்சி ஆளும் இயந்திரத்தைத் தான் ஏற்றுத் தாங்கி நடத்தும் வல்லமை பெற்றதாக இருக்கவேண்டும். வாயளவில்—ஏட்டளவில் சொல்லிக் கொள்ளலாம்எழுதிக்கொள்ளலாமே தவிர அது உண்மையில் சர்வாதிகாரமே! ஆம் ஜனநாயகத்தின் பெயரால் நடக்கும் சர்வாதிகாரமே அது! இதனை நாம் வருத்தத்துடன் குறிக்கிறோம்.

தேர்தல் உண்டு. வாக்குரிமை உண்டு. ஆனால் வேட்பாளன் நான் தான்—நான் மட்டுமேதான் என்று சொல்லி ஊருக்குப் பேருக்குத் தேர்தல் நாடகமாடும் இராணுவ ஜன—அதிபதிகளைப் பார்க்கிறோமே அதிலிருந்து ஒருசில சதவீதம் வேறுபாடுடையதாக இநக்கலாமே தவிர நடைமுறையில் நம் ஜனநாயகமும் அப்படித்தான் ஆகிவருகிறது.

இருபதாண்டுகளுக்குப் பிறகும், ஒரு ஆளுங்கட்சித்தன்னிலே பிளவுபட்டுத் தன் பெரும்பான்மையை இழந்துவிட்டநேரத்திலும் அதனிடமிருந்து நாட்டை வாங்கி நடத்திச் செல்ல வல்ல எதிர்க்கட்சியையோ எதிர்கட்சிகளையோ ஊக்குவித்து வளர்க்கவில்லை மக்கள்! காரணம்...?

அறியாமை! மக்களுடைய அறியாமையை நாம் இங்கே குறிப்பிடவில்லை. அவர்களுக்கு வாக்குரிமை வழங்கியவர்களின் அறியாமையைத் தான் குறிப்பிடுகிறோம்.

வயதுவந்த எல்லோருக்கும் வாக்குரிமை என்றோம். அந்த வாக்கின் மதிப்பும் சமம் என்றோம். டாக்டர் இராதாகிருஷ்ணனும், டாக்டர் ஏ. எல். முதலியாரும் அறிஞர் அண்ணாவும் நேருவும் போடும் ஒரு வாக்குச்சீட்டுக்கு என்ன மதிப்போ அதே மதிப்புத்தான் அந்த வாக்குச் சீட்டைப் பற்றி ஏதுமறியாத ஒரு பாமரன் போடும் வாக்குக்கும் மதிப்பு என்றோம். பாமரன் அறிவையும் அறிஞர்தம் அறிவையும் அளந்தறியக் கருவி இருக்கிறதா என்று கேட்டுக்கொண்டும் 'எல்லோரும் சமம் என்பதுறுதியாச்சு' என்று பாடிக் கொண்டும் மகிழ்ச்சி யடைந்தோம்.

ஒரு அரசாங்க அலுவலகத்தில் வேலை செய்ய வரும் மிகச் சிறிய பணியாள் ஒருவனுக்குக் கூட எழுதப் படிக்கத் தெரிந்திருக்கவாவது வேண்டுமென்றோம். ஆனால் சட்டமன்ற நாடாளு மன்றங்களுக்கு வந்து சட்டமியற்றும் பணியை மேற்கொள்பவருக்கு இருபத்தொரு வயதைத் தவிர எதுவும் தேவையில்லை என்றோம். விதிவிலக்கான ஒரு சில அறிஞர்களையும் பெரியவர்களையும் காட்டி அதனையே பொருந்தாத இடங்களுக்கும் விதி என்றோம்.

ஜனநாயகம் இன்றைக்கு 'விரும்பப்பட்ட சர்வாதிகாரமாக அல்லது "வேறு வழியற்ற ஒருவகை ஜனநாயகமாக" அல்லது எந்தத் தலையானாலும் அதன் உள்ளே என்ன இருந்தாலும் கவலையில்லை, 'தலைதான் கணக்கு' என்று தலை எண்ணும் ஜனநாயகமாக ஆகிவிட்டது. இப்படித் 'தலைதான் கணக்கு' என்று, நம்முடைய ஜனநாயகம் தலை எண்ணும் ஜனநாயகமாக ஆனதற்கு ஒருவேளை நாம் வாக்குரிமை வழங்கிக் கொண்டிருக்கிற முறை காரணமாக இருக்குமா என்று எண்ணிப் பார்க்க வைக்கிறது.

ஜனநாயகம் என்பது 'பெரும்பான்மை' என்னும் தத்துவத்திலே நடப்பதாயிருக்கிறது. நம் நாட்டின் பெரும்பான்மை எப்படிப்பட்டது என்

பதைத் நாம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம்! தெளிவானது! கல்லாமையும் இல்லாமையும்தான் இந்த நாட்டின் பெரும்பான்மை!

இந்தப் பெரும்பான்மையை மாற்றி அமைத்து அதன் மூலம் ஆளுங் கட்சி—அதற்கு ஈடு கொடுக்க வல்லமையுள்ள எதிர்க் கட்சி என்று இரண்டைச் சரியாக மக்கள் தேர்ந்தெடுக்க நாளாகும் என்று எண்ணித் தானே என்னவோ ஆளுங் கட்சியாக இருந்த தங்களையே இருக் கூருகப் பிரித்துக் கொண்டு எதிர்க் கட்சிஅமைத்திருக்கிறார்கள் 'பழுத்த' காங்கிரஸ் பெரியவர்கள் வரவேற்கிறோம.

ஆனால் அங்கும் பாருங்கள் நம் மக்களின் சாமர்த்தியத்தை! இவர்கள் அப்படித் தங்களையே எதிர்க் கட்சியாகவும் ஆக்கிக்கொள்ள முனைந்தால் ஆளுங்கட்சிக்கு ஆட்டம் கொடுக்கும் வகையில்தான் முன்கூட்டியே சந்தித்து தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், 282 பேர்களை! சரியான எதிர்க்கட்சிவேண்டுமென்று பார்த்தால் ஆளுங்கட்சியே இருக்காது போலிருக்கிறது. என்ன செய்வது கொடுமைதான்!

உலகிலே தற்சமயம் ஜனநாயகத்தைவிட நல்ல ஆட்சிமுறை இல்லை. இருந்தாலும் நாம் மேற்கொள்ளும் ஜனநாயகத்துக்கும் உண்மையான ஜனநாயகத்துக்கும் இடையிலே இவ்வளவு இடைவெளி இருக்கத்தான் வேண்டுமா?

இடைவெளியைக் குறைக்க நாம் கூச்சப்படாமல்—வரட்டுக் கவுரவம் பார்க்காமல் வாக்குரிமை வழங்கியிருக்கும் முறையை மறுபரிசீலனை செய்தால் என்ன? சட்டமன்ற நாடாளுமன்ற வேட்பாளர்க்குக் குறைந்தபட்சத் தகுதிகளை வரையறுத்தால் என்ன?

ஏதுமறியாத குழந்தையின் கையில்—பழம் இனிமையானது சுவையானது என்பதற்காக அப் பழத்தையும் அதனை அரியும் கத்தியையும் சேர்த்துக்கொடுத்து, குழந்தை பழத்தை அரிந்து சாப்பிட முனையும்போது கையை அறுத்துக் கொண்டு இரத்தம் சொட்டச் சொட்ட வீறிட்டு அலறினால் எந்த பெற்றோரின்மனம்தான்பதைக்காது? 'ஆகா தவறு செய்துவிட்டோம்' என்று நினைக்காது? அடடெ பழத்தை நாமே குழந்தைக்கு அறுத்துக் கொடுத்திருக்கலாமே என்றும் பழம் சுவையானது என்பதற்காக நாம் கத்தியையும் சேர்த்துக் குழந்தையின் கையில் கொடுத்தது தவறு என்றும் பெற்றோர்கள் நினைப்பார்கள் அல்லவா?

அதுபோல ஜனநாயகம் என்கிற கனியை வாக்குரிமை என்கிற கத்தியால் சுவைக்க குழந்தை நிலையிலே உள்ள மக்களிடம் பெற்றோர்களின் நிலையிலே இருந்த பெருந்தகையாளர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்கு, இருபது ஆண்டுகளுக்குப் பிறகும்—வலிமையற்ற எதிர்க் கட்சி இல்லாமலும் — அமர்க்களப் படும் நமது நாடாளுமன்றமே நல்ல சான்று!

இருபதாண்டுகளுக்குப் பிறகும் நம்மைத் 'தலைகுனியவைக்கும் தலைக்கணக்கு' ஜனநாயகம்தான் வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகள் என்ன என்பதைப்பற்றி நல்லறிஞர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென வேண்டுகிறோம்.

★

10-ம் பக்கத் தொடர்ச்சி

...மனச்சாட்சின்னு ஒண்ணு இருக்கு சந்திரா...அது எப்பவும் உறுத்திக்கிட்டே இருக்கும். உலகத்தை விட்டுடபோகும்போது கூடவே எதை எடுத்துக்கிட்டுப் போகிறோம்? நேர்மையா சம்பாதிச்ச பணமே இந்தக் காலத்தில் நிலைக்கவில்லை. இந்தப்பணத்தை அதுவும் சொன்ன வாக்கைக் காப்பாத்தாமல் நானே வைத்துக் கொண்டால்...என்னால் நிம்மதியா வாழ முடியாது சந்திரா...''

சந்திரன் அவனைக்கட்டி அணைத்துக்கொண்டான். அவன் குரல் தழதழத்தது...

"டேய் நீ பெயரைப்போல சத்திய மூர்த்திதாண்டா''

பஞ்சுப் பொதியில் நெருப்புப்பட்டிருந்தால்கூட அத்தனை வேகமாக பரவியிருக்காது. இந்த விஷயம் ஊர் முழுவதும் ஒரே நிமிடத்தில் பரவிவிட்டது.

ரேவதியின் அப்பா பல்லெல்லாம் வாயாக...இல்லை வாயெல்லாம் பல்லாக சிரித்துக்கொண்டே காரில் வந்து இறங்கினார். சந்திரன், ''வாங்க மாமா'' என்று மரியாதைக்காக அழைத்தான், உள்ளே கட்டிலில் அமர்ந்தார்.

''என்ன தங்கச்சி...விஷயம் கேள்விப்பட்டேன்; ரொம்ப சந்தோஷம். சந்திரன் அதிஷ்டக்காரப்பயல். எனக்கு முன்னமே அவனைப்பத்தி தெரியும், இருந்தாலும் சும்மா சுத்திகிட்டிருக்கானே ஏதாவது ஒரு வழி செய்யனும்னு நான்கூட நினைச்சுக்கிட்டிருந்தேன். அதனாலேதான் அவனை அடிக்கடி திட்டுவேன்—அப்படியாவது சம்பாதிக்க ரோஷம் வருமேன்னுதான்! நேற்றுக்கூட புத்தி சொன்னேன் முறைப்பா வந்துட்டான்...''

நாக்கில் தேன் தடவிவந்தாரோ? குழைவாகப் பேசினார்.

''ஏதோ இனிமே நல்லகாலம் தான். கிடைச்ச பணத்தை நல்ல முறையிலே பயன்படுத்துங்க. நம்ம குடும்பத்துக்குப் பெரியவன் நானிருக்கேன். எப்படிபெப்படி செய்யனும்னு ஆலோசனை கேளுங்க. சந்திரனுக்கும் அனுபவம் போதாது...''

''ஆகட்டும் அண்ணா'' தலையசைத்தாள் அவன் அம்மா.

'சரி,..எப்போ...வைச்சுக்கலாம்'

''எதை?'' புரியாமல் கேட்டாள்.

''கல்யாணத்தை. ரேவதி பிறக்கும்போதே நான் உன்னிடம் சொன்னனே தங்கச்சி, சந்திரன் தான் அவ புருஷன்னு...''

அவர் பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சந்திரன் மெதுவாகச் சிரித்தான், அதில் கேலி கலந்திருந்தது.

''பார்த்தாயா அம்மா......மாமாவுக்கு நம்மமேல் எவ்வளவு அக்கறை...''

''தயவு செய்து என்னை மன்னிச்சிடுங்க மாமா......உங்க அந்தஸ்துக்கு ஏற்ற மாப்பிள்ளை நான் இல்லை. பணம் இருக்கிறவனுக்குத்தான் நீங்கெல்லாம் மதிப்புக்கொடுப்பிங்க...அப்படிப்பட்ட உறவு எனக்குத் தேவையில்லை. நீங்கபோயிட்டு வாங்க. ஆனா ஒன்னுமட்டும் சொல்றேன் மாமா, பணம் ஒரு பந்துமாதிரி எந்தப் பக்கம் வேண்டுமானாலும் உருண்டு ஓடும் எனக்கு வேறொரு இடத்தில் பெண் பார்த்தாகிவிட்டது. அழைப்பிதழ் அனுப்புகிறேன் அவசியம் வாங்க...''

''வெளியே போ''...என்று சொல்லாததுதான் குறை. அவராகவே எழுந்து நடந்தார்,

அவர் காருக்குக்கூட அவமானம் தாங்க முடியவில்லையோஎன்னமோ 'புர்'ரென்ற சப்தத்துடன்புகையைக் கக்கிக்கொண்டு சீறிப் பாய்ந்தது.

★

கெ. க. இராசேந்திரன், சென்னை.

உங்களுக்குப் பிடிக்காத ஒரு கட்சி ஏட்டில் ஒருவர் 'ஏதோ' ஒன்றை எழுதினார் என்று தெரிந்த பின்னர், அந்த நபரே அனுப்பும் கட்டுரை, கவிதைகளுக்கு நீங்கள் தரும் மரியாதை எப்படி இருக்கும்? தரமாக இருந்தும் பிரசுரிப்பீர்களா, மாட்டீர்களா?

'காஞ்சி' தரம் ஒன்றுக்குதான் 'மரியாதை' கொடுக்கிறது. 'மதிப்பு'த் தருகிறது. 'எழுதுவோர் யார்' என்பதற்கல்ல! 'எதிலே' எழுதுகிறார் என்பதையும் பார்த்து அல்ல. ஆனால் 'ஏதோ' எழுதி, 'எதிலோ' பிரசுரித்துக்கொண்டவர், என்ன எழுதி இருக்கிறார் என்பதையும் தெரிந்து கொள்வது தவறாக இராது. அதன் அடிப்படையில் முடிவெடுப்பதும்குற்றமாகிவிடாது.

• • •

நான் சில கவிதைகளை 'காஞ்சி'க்கு அனுப்பினேன். பிரசுரிக்கப்படவில்லை. ஆனால் அதே கவிதைகளை வேறு இதழ்கள்பிரசுரித்துள்ளன, இது ஏன்?

ஒரே பொருளைப் பார்க்கின்ற இரு இணைக்கண்கள், ஒன்றையே உணரும் என்று சொல்ல முடியாது. காஞ்சிக்கு வந்த கதை, கட்டுரை, கவிதைகள் திருப்பி அனுப்பப்பட்டு, பிறகு அவையே வேறு இதழ்களில் வெளியாவதையும் பார்த்துக் கொண்டுதானிருக்கிறோம். இதுபோலவே ஒரே கவிதையை, அல்லது கட்டுரையை ஒரே நேரத்தில் இரண்டு ஏடுகளுக்கு அனுப்புகின்ற படித்த 'மேதாவி'களும் நம் நாட்டில் ஏராளம்! எவ்வளவு விழிப்புடனிருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் ஏமாந்து விட நேரிடுகிறதே!

• • •

எம்.சி. ரத்தினம், மாச்சம்பாளையம்.

அறிஞர் அண்ணா அவர்களது அன்புக்கும், வள்ளல் எம். ஜி. ஆரின் வீரத்திற்கும் இணை இவ்வுலகத்தில் வேறெங்காவது, யாரிடமாவது உண்டா?

அறிவு, அன்பு, கொடைத்தன்மை, வீரம் இவை போன்ற மதிப்பற்ற இயல்புகளுக்கு ஒப்புமை கண்டு விவாதிப்பது தேவையற்றது. ஒவ்வொருவரிடமும் ஒருவித சிறப்புத் தன்மை இருக்கக்கூடும், ஒப்புமை சில வேளைகளில் தீய விளைவுகளைத் தோற்றுவித்து விடக்கூடுமே.

வினா-விடை

எம். கே. சுந்தரம், திருவாரூர்.

"ரபாட்" மாநாடு பற்றிய ஒத்திவைப்புப் பிரச்னை மீதான வாக்கெடுப்பு ஒழுங்கீனமானது என்ற குற்றச்சாட்டுக்குத் தங்கள் பதில் என்ன?

நாடாளுமன்றத்திலும், மாநிலங்களின் சட்டமன்றத்திலும் சில ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டு "எதையும்" பேசலாம் என்பதை நினைவில் கொண்டு, தாங்கள் எங்கே இருக்கிறோம் என்பதை மறந்துவிட்டு சிலர், சில வேளைகளில் பேசுகிறார்கள், அவ்வளவுதான்!

ஆர். பாஸ்கரன், கீவளூர்.

ஊதிய உயர்வுக்கும் ஒரு உச்ச வரம்பு உண்டா? தேவையா?

எவ்வளவு பசித்தாலும் "கொள் அளவு' மட்டும்தானே புசிக்க முடிகிறது. மீறித் திணிக்கும் போது "டாக்டர்" தேவைப் படுகிறார் இல்லையா. அது போலத்தான் இதுவும்.

து. ரங்கசாமி, மதுரை.

இப்போதைய காங்கிரஸ் நிலவரம் பற்றி—எல்லைக்காந்தியின் கருத்து என்ன?

நேர்மையும், சேவை உணர்வும், சுய நலமற்ற தன்மையும் உள்ளவர்களிடமே, ஆட்சி அதிகாரம் வழங்கப்படவேண்டும்; இப்போது இந்தியாவில் அப்படிப்பட்ட தலைவர்கள் இல்லை—என்றுதான் பாஷியர்கான் கருத்தறிவித்திருக்கிறார்.

என். சண்முகம், திருப்புத்தூர்.

உலகில் "மிகச்சிறந்தது" என்று ஏதேனுமிருக்கிறதா?

மனமே மிகச்சிறந்த போதகன் என்றும், காலமே மிகச்சிறந்த ஆசிரியன் என்றும், உலகமே மிகச்சிறந்த புத்தகமென்றும், கடவுளே மிகச்சிறந்த நண்பன் என்றும் யூதப் பழமொழி ஒன்று தெரிவிக்கிறது.

எம். எஸ். லெட்சுமணன், மாரங்குடி.

வயலுக்கு அதிக உரமிடும் நாடு எது என்று கூறமுடியுமா?

இதுவரையில் கிடைத்திருக்கிற விவரங்களின்படிஸ்பெயின் நாடுதான் அதிக உரமிடுவதாகத் தெரிகிறது. அங்கு ஒரு ஹெக்டருக்கு 120 கிலோ உரமிடப்படுகிறதாம். அது போல் ஒருஹெக்டருக்கு 6280 கிலோ விளைவும் இருக்கிறதாம்!

தே. வெங்கடாசலம், காஞ்சிபுரம்.

நேருவின் பிறந்தநாளைக் கொண்டாடும் உரிமை இந்திராவின் காங்கிரசுக்கா? நிஜலிங்கப்பாவின் காங்கிரசுக்கா?

இதிலே உரிமைப் பிரச்னை எதுவும் இருக்கவில்லைஇந்திராவின் குழு கொண்டாடுவது குடும்ப விவகாரம்; நிஜலிங்கப்பாவின் குழு கொண்டாடுவது அரசியல் விவகாரம்.

எம். சின்னப்பிள்ளை, மன்னார்குடி

"அரசியல் ஏமாளி" என்று யாரைச் சொல்லலாம்

காமராசரை நினைத்துக் கொண்டு இப்படியெல்லாம் வினா விடுக்கக் கூடாது!

எல். ராஜேந்திரன், சிறுமுகை.

காமராசர் தொடங்கப் போவதாகக் கூறி இருக்கும் புதிய ஸ்தாபனத்துக்கு ராஜாஜி ஆசி கூறியும், வரவேற்றும் இருப்பது எதனால்?

ராஜாஜிக்கும், காமராசருக்கும் உள்ள உறவுபற்றி உங்களுக்கு ஏதும்தெரியாதா என்ன? காங்கிரஸ் கட்சி உடைந்து. உடைந்ததிலேயே ஒரு உள் கட்சியும் ஏற்பட்டால் அதன் விளைவு எப்படி இருக்கும் என்பதை அறியாமலா ராஜாஜி வரவேற்றிருக்கிறார் என்று நினைக்கிறீர்கள்? ஊக்குவித்து ஒழிக்கும் ராஜதந்திரம் ஐயா இது!

பேரம் பேசும் தி. மு. க. சோரம் போகாது!

சில பேர் ஆத்திரத்தில் பேசலாம், ஏதோ இந்திரா காந்தியின் சர்க்கார் தி. மு. க-வை விலைக்கு வாங்கிவிட்டது என்று டெல்லியில் இருக்கிற பிலுமோடி என்பவர் பேசியிருக்கிருர் இப்படி.

"ஆமாம். ஆமாம் மக்களுடைய வரிப் பணத்தினைக் கொடுத்து விலைக்கு வாங்கியிருக்கலாம்" என்று ராஜாஜி அவர்கள் அந்தக் குற்றச்சாட்டிற்கு முட்டுக் கொடுத்திருப்பது உள்ளபடியே வேதனைக்குரிய அம்சமாகும். வரிப்பணத்தைக் கொடுத்து விலைக்கு வாங்கியிருக்கிருர்கள் என்ருல் நான் பகிரங்கமாக ஒத்துக்கொள்கிறேன். கருணநிதியையோ நெடுஞ்செழியனையோ நண்பர் மதியழகனையோ, அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற மற்றவர்களையோ யாரும் தனித்தனியாக விலை கொடுத்து வாங்கவில்லை பேரம் நடந்தது என்று கூறுவார்களானுல் அது என்ன பேரமாக இருக்கும்? என்ன நிபந்தனையாக இருக்கும்? இந்திரா காந்தியின் சர்க்கார் முற்போக்குச் சக்தியாகச் செயல்படுகிறவரையில் தி. மு. க. வினுடைய ஆதரவு இந்திராகாந்தியின் அரசுக்கு இருக்கும். அவர்களும் தப்பித் தவறி சிண்டிகேட்டின் பிற்போக்குக் கொள்கையின் பின்னுல் சென்ருல் அன்றைக்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவு வாபஸ் பெறப்படும்.

14 கோடி ரூபாய் மத்திய சர்க்காரிடமிருந்து நாம் வாங்கியிருக்கிருேம் என்ருல் நான் கோட்டை கட்டிக்கொள்ளவா? நாவலரின் தனிப்பட்ட காரியத்திற்காகவா? நண்பர் வேழவேந்தனுக்காகவா? அல்லது கழகத்திலே இருக்கிற தனிப்பட்டவர்களுக்காகவா? 14 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து வறட்சி நிவாரண நிதியாகப் பெற்று, நாமும் ஒரு மூன்று கோடி ரூபாய் சேர்த்து, மொத்தமாக ஏறத்தாழ 17 கோடி ரூபாய் இந்த 8 மாதக்காலத்தில் தமிழ் நாட்டிலே பஞ்சப் பகுதியில் வாரி இறைக்கப்பட்டிருக்கிறது. தோண்டப்பட்ட குளங்கள் எத்தனை? ஆழப்படுத்தப்பட்ட கிணறுகள் எத்தனை? தூர் வாரப்பட்ட ஏரிகள் எத்தனை? கரை உயர்த்தப்பட்ட ஆறுகள் எத்தனை? வகைப்படுத்தப்பட்ட வாய்க்கால்கள் எத்தனை இதையெல்லாம் பார்த்தால் 17 கோடி ரூபாயை எவ்வளவு நல்ல காரியங்களுக்காக நாம் பயன்படுத்திருேம் என்பது தெளிவாகத் தெரியும்.

அது மாத்திரமல்ல; இந்த எட்டு அல்லது ஒன்பதுமாதக் காலத்தில் அண்ணு அவர்களின் மறைவிற்குப் பிறகு, அண்ணு அவர்கள் எந்த சேலம் திட்டத்திற்காக, தூத்துக்குடிக்காக எழுச்சி நாள் கொண்டாட வேண்டுமென்று தமிழர்களுக்குக் கட்டளையிட்டாரோ, அந்தத் தூத்துக்குடியை அவர் வாழ்ந்த காலத்திலேயே பெற்ருேம். ஒரு மாதத்திற்கு முன்பு, நாம் சேலத்தைப் பெறக்கூடிய பச்சைக் கொடியை டெல்லி சார்க்கார் நமக்குக் காட்டியிருக்கிறது.

சேலம் நமக்குக் கிடைத்திருக்கிறதென்ருல் இவைகள் எல்லாம் பேரப் பொருட்கள் என்று ராஜாஜி சொல்வாரானுல் நான் அதற்காக வெட்கப்படப் போவதில்லை. என்னுடைய நாட்டு மக்களுக்காக, ஏழை எளிய பாட்டாளி மக்களின் நல்வாழ்விற்காக நான் ஆட்சி நடத்துவதில் கொஞ்சமும் அஞ்சப் போவதில்ல இந்தப் பேரம் திருச்செந்தூரில் நடத்திய பேரம் போன்றதல்ல, டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்காகப் பேசப்பட்ட அந்த பேரம் போன்றதல்ல. திராவிட முன்னேற்றக்கழகம் பேரம்பேசும். நாட்டு மக்களுக்காகப் பேரம் பேசும் தாய் மொழிக்காக பேரம் பேசும். தமிழ் வாழப்பேரம் பேசும். அதனுடைய வாழ்வில் ஒருகண நேரமும் சோரம் போகாது என்பதை மாத்திரம் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமை என்ன? டெல்லியில் ஒவ்வொரு பெரிய தலைவர்களுடைய வீட்டிற்கும் போலீஸ் காவல். எந்தத் தலைவர்கள்? தமிழ்நாட்டிற்குத் திக் விஜயம் செய்து, "அண்ணுதுரை ஆட்சியில் அதற்குப்பிறகு கருணநிதி ஆட்சியில் சட்டம் இல்லை, அமைதியில்லை ஒழுங்கில்லை" என்று யார்யார் இங்கே முழக்கமிட்டார்களோ அந்தத் தலைவர்கள் — டெல்லிப் பட்டணத்தில் போலீஸ்காவல் இல்லாமல்வெளியே போக முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அவர்கள்தான் இங்கே சட்டம், அமைதி, ஒழுங்கு இல்லை என்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

கேரள - மேற்கு வங்க நிலைமைக்குப் பின்னுமா கம்யூனிஸ்டுகள் காய்கின்றனர்?

ஆனால் தமிழ்நாட்டில் மாத்திரம் தான் அமைதி நிலவுகிறது—சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறது என்று மற்ற மாகாணங்களில் இருக்கிற அமைச்சர்கள் பாராட்டுகிறார்கள்.

என்னைச் சந்தித்து நிருபர்கள் கேட்டால் என்ன சொல்வேன்? என்னுடைய மாகாணத்தில் சட்டம் இருக்கிறது அமைதி இருக்கிறது. ஒழுங்கு இருக்கிறது என்று நான் புன்னகை பூத்த முகத்தோடு, கம்பீரமாக, நிமிர்ந்தநெஞ்சோடு சொல்வேன். அந்த அளவுக்குத் தமிழ்நாடு இருக்கிறது. நீங்களும் ஒத்தழைப்புத் தந்து வருகிறீர்கள். ஆனால் மேற்கு வங்கத்தில் அஜாய் முகர்ஜி நிருபர்களைச் சந்தித்த நேரத்தில் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்கிறார். "மேற்கு வங்கத்தில் சட்டம் இல்லை. ஒழுங்கு இல்லை. அமைதியில்லை. உயிர்களுக்குப் பாதுகாப்பில்லை." என்று! சொல்பவர் யார்? அந்த மாநிலத்தினை ஆளுகிற முதல்வர் சொல்கிறார். "என்னால் எப்படி இதற்கெல்லாம் விமோசனம்காண்பது என்று தெரியவில்லை; என் கை கட்டப்பட்டிருக்கிறது." என மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் சொல்கிறார். ஏன்? போலீஸ் அவருடைய கையில் இல்லை. துணை முதலமைச்சர் ஜோதிபாசுவிடம் — கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரின் கையில் இருக்கிறது. ஜோதிபாசுவின் கையில் மேற்கு வங்க போலீஸ் இலாகா, உள்துறை இலாகா இருக்கிறது. அங்கேயிருக்கிற முதலமைச்சர் சொல்கிறார் என்னுடைய கைகட்டப்பட்டிருக்கிறது என்று.

வீட்டிலே உள்துறை இலாகா மனைவியின் கையில் இருக்கிறது. கணவன் சொல்கிறான். என்னுடைய கை கட்டப்பட்டிருக்கிறதென்று. அந்தக் கணவனைப் பற்றி தெருவார் பரிதாபப்படுவார்கள். ஊரார் பரிதாபப்படுவார்கள் ஐயோ, இவனுக்கு ஒரு அடங்காப்பிடாரி மனைவி வந்து வாய்த்தாளே என்று. அந்தக் கணவனின் நிலையில் மேற்குவங்க முதல்வர் இருக்கிறார். என்ன காரணம்? போலீஸ்துறை அங்கேயிருக்கிற ஜோதிபாசு, இடதுசாரிகம்யூனிஸ்ட் தலைவர் கையில் இருக்கிறது. அந்த ஜோதிபாசுவின் நண்பர் இடது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் நம்முடைய ராமமூர்த்தி அவர்கள் தமிழகத்தில் வந்து பேசுகிறார், முன்னேற்றக் கழக ஆட்சியும் காங்கிரஸ் கட்சி ஆட்சியும் ஒன்று போலவே இருக்கிறது என்று! காங்கிரஸ் கட்சி ஆட்சிபோல் இருக்கிறதே என்று சொன்னவரைபரவாயில்லை ஆனால் உங்களுடைய வங்காள கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சிபோல் இல்லாமல் இருக்கிறதே அதுவரையில் மகிழ்ச்சி. இன்னும் ராமமூர்த்தி சொல்லுகிறார்: தி. மு. க.-வினருக்கு பொன்னுடைகளை பணக்காரர்கள் போர்த்துகிறார்கள் என்று!

இங்கு வேதாசலம் இன்று பொன்னுடை என்று ஒன்றைப் போர்த்தினார். வேதாசலம் ஒன்றும் மாடமாளிகையின் சொந்தக்காரரல்ல. மிட்டா மிராசு, குட்டி குபேரரல்ல. பல பஸ்களின் சொந்தக்காரரல்ல. அந்தப் பொன்னுடையை போய் உருக்கிப் பார்த்தால்தான் நல்ல வெள்ளியா என்பது கூடத்தெரியும். இதைப் பார்த்து ராமமூர்த்தி பதட்டப்படத் தேவையில்லை.

அறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த நேரத்தில் மிக வேதனையுடன் ஒன்றைக் குறிப்பிட்டார்கள் ஒரு சமயம். சில மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத ஆட்சி உருவாயிற்று, மேற்கு வங்காளம், கேரளம் தமிழகம் போன்ற இடங்களில்! ஆனால் சிலர் அவர்களுக்குள்ளேயே அடித்துக்கொண்டு, ஒற்றுமை இல்லாமல் இருக்கிறார்களே! காங்கிரஸ் அல்லாத ஆட்சிகள் அமைந்தால் இப்படித்தான் போகுமோ என்று மக்கள் எண்ணிவிடக்கூடாதே என அண்ணா அவர்கள் வேதனைப்பட்டிருக்கிறார்கள். நான் அந்த வேதனையை இன்று ராமமூர்த்தி அவர்களுக்கு ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கேரளத்தில் என்ன செய்தீர்கள்? இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் ஆட்சி உருவாயிற்று. ஆனால் கேரளத்தின் முடிவென்ன? இன்று ஆட்சி கவிழ்ந்து அச்சுதமேனன் அவர்கள் தலைமையில் புதிய மந்திரி சபை அங்கே ஆளுகிறது. வங்கத்தில் கேள்விக் குறியாக இருக்கிறது.

இந்த இடத்தில் எல்லாம் தன்னுடைய கவனத்தினைத் திருப்பாமல் இங்கே ஒழுங்கான முறையில், அன்போடு, மகிழ்ச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிற முன்னேற்றக் கழகத்தினை — அதன் ஆட்சியினைப் பார்த்து இவ்வளவு கடுமையாக விமர்சனம் செய்திருப்பது அவருக்கும் நல்லதல்ல. இந்தியாவின் எதிர்காலத்திற்கும் நல்லதல்ல.' என்று மாத்திரம் நண்பர் ராமமூர்த்தி அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். —முதலமைச்சர் கருணாநிதி

உரைகல்

"ஓவியன்"

கலை. இலக்கியத் திங்களிதழ்.
ஆசிரியர்: ஓவியர் மா. முத்து
விலை 40 காசுகள்.

ஓவியர் மா, முத்து அவர்களை ஆசிரியராகக் கொண்டு வரும் இந்த ஏடு, வரும் இதழ்கள் மூலம் இளம் ஓவியர்களுக்குத் தேவையான, பல விஷயங்களை விளக்கிடப்போவதாக அறிவித்துள்ளது. கழக முன்னணித் தலைவர்கள், அமைச்சர்கள் முதலானோரின் வாழ்த்துச் செய்திகளே முதல் இதழைப் பெரிதும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. எனினும், இடையிடையே தரப்பட்டிருக்கும் துண்டு துணுக்குச் செய்திகள் சுவையானவை, மக்கள் புரிந்து கொள்ள வேண்டியன. வருங்காலத்தில் இதன் பணி நிச்சயம் செம்மையுறும் என்று நம்பத் தகுந்த ஆதாரங்கள் இவைகள். ஓவியர்கள் மட்டுமேயல்லாது அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளும இருக்கின்றன; இன்னும் இருக்க வேண்டும்

"குயில்"

திங்களிதழ்;
ஆசிரியர்:
டாக்டர். கே. எம். ஏ. வகாப்
விலை 0-25 காசுகள்

ஆசிரியர் வகாப் அவர்கள் ஒரு கவிஞர். தமிழின் மீதும், தமிழகத்தின் மீதும் உணர்வு மிகுந்த பற்றுக் கொண்டவர் என்பதை, இதழின் உள்ளே இருக்கும் கதை, கட்டுரை கவிதைகள் விளக்குகின்றன. இளம் கவிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் முன்னிடந் தந்து, சிறப்பான தொகுப்பாக இதழைத் தருவது, ஆசிரியரின் தனிச் சிறப்பேயாகும். கழகப் பற்றுடையவர் என்பவதும், அவரது எழுத்துக்களில் காணப்படுகின்றன. பல்வேறு சுவைகளுடனும் இதழ் நிறைவுற்று இருக்கிறது. வெண்பாப் போட்டியும் உண்டு. மருத்துவ விளக்கங்களும் இருக்கின்றன, பாடல் இலக்கணமும் தொடங்கப்பட்டிருக்கிறது. வினா—விடையும் இல்லாமலில்லை. பாரதிதாசனார் தொடங்கிய பெயரில் வெளிவந்து கொண்டிருக்கும் 'குயில்' வருங்காலத்திலும் அந்தப் பெருமையைக் காக்கும் என்று நம் பகமாகத் தெரிகிறது.

—சீயேயெம்.

காஞ்சி 23—11—69 REGD. No. M.8326

வெண்பாவும்-விளக்கமும்!

—நாகபுரி ரமணி—

உந் நா மகுடியினுக்
கோவாக் கிறக்கமுற்றுப்
பைந் நாகமானோமது
வுன்னியோ—அன்னேவிதம்
அண்ணாவென யாங்கோடி
அண்ணந் துழவி யரற்றச்
சொன்னாயிலை யேதுஞ் சொல்.

கன்னற் சுவை மன்னிப் பொலியும் செந்நாப் புலவர் அண்ணா அவர்கள் பேசியவை சொற்பொழிவுகளா என்ன? அல்ல, அல்ல. நாவினால் தமிழினத்துக்கென்று அவர் ஊதியமகுடி இசை அன்றோ அவை! நா-மகுடி ஊதுவார் அவர், நாமோ நாகம் என தலை இறங்கி, அச்சடித்த பதுமைகள்போல் அவையினிலே பேச்சு—மூச்சின்றி அவசமுற்றிருப்போம். அண்ணாவின் ஆயுள் முழுதுமான அனுபவம் இது. ஆயின் அண்ணா பண்புச் செம்மலாயிற்றே! அவர்க்கு நாம் செய்த நன்றிக்கு நன்றியாக அவர் கடைசியில் ஒன்று செய்துபோனாராம். என்ன அது? "இதுகாறும் நான்பேச நீங்கள் முழு மோனத்திருந்து கேட்பதே நிகழ்ந்து வந்துள்ளது. இதென்ன ஒருதலைப் பட்ட நேர்மையின்மை? இன்று ஒரு நாளேனும் நீங்களனைவரும் "அண்ணா அண்ணா"—எனக்கூவுங்கள். நான் முழு மோனத்திருந்து செவிமடுக்கிறேன்"—என்று நாம் அனைவரும் நாக்கு அண்ணம் இரண்டையும் துழவித் துழவி அரற்றி ஆர்ப்பரித்த போதிலும் ஒரு சொல்லேனும் பதில் பேசாது கிடந்தாராம் அண்ணா.

நாட்டம் இமைத்தலால்
நொய்தாமிவர் நோட்டமென
வட்டமிகு உரை
விருந்தினி—ஆட்டமிலா
இமையவர்க்கே ஆற்றி
ஏற்றப் போயினை போலும்
எமைவிட் டைய ஈண்டே.

மனிதர்களுக்குக் கொட்டும் இமையுள்ள கண்கள். விண்ணவரின் விழியோ கொட்டாத விழி. அண்ணாவின் சொற்பொழிவில் சுவையீட்டமோ பொருளூட்டமோ இல்லாத இமை நேரமும் கிடையாதல்லவா? ஆனால் அவர் உரைக் கோவைகளைக் கேட்டிருக்கும் போது இயல்பு காரணமாக இமை கொட்டத்தானே செய்வோம் அவ்வப்போது. நாட்டம் இமைக்கின்ற நொடி—நுணுக்க நேரமேனும் அண்ணாவின் பேச்சிலுள்ள ஆழ்பொருளை விட்டுவிடத்தானே நேரிடும்? ஆகவே அண்ணா என்ன எண்ணினாராம்—மூடித்திறத்தலே இல்லாத விழியுடைய, அதாவது எப்போதும் விழிப்புடைய விண்ணகத் தேவர்கள் முன் தான் உரைவிருந்தாற்றினால் இன்னும் பயன் மிகுக்கும் என்று எண்ணினாராம். இவ்வாறு எண்ணியோ அண்ணாவே, எங்களைவிட்டு ஏகினாய்?—என்கிறது பாடல்

இமையவர் என்றால் வானோர். ஆட்டமிலா இமையவர்—கொட்டாத உமையை இடையவர்களான தேவர். இமையவர் என்ற இச்சொல் இருநயம்பட இங்கு பெய்யப்பட்டது.

கொடியி லுதிப்பித்துக்
கோடிப் பணி மாண்பால்
தொட உச்சித் தேரோச்
சினால்—மடிவைத்துச்
சீராட்டக் கொணவென்று
சொல்லானோ மறலிக்கு
ஓராழித் தேரேறு வோன்.

சூரியனின் தேருக்கு சகடம் ஒன்றே ஒன்று என்பது புராண மரபு. எனவே சூரியன் ஓர் ஆழித் தேர்ஏறுவோன். அண்ணா அவர்கள் இளஞ்சூரியனை அதாவது உதய சூரியனைக் கட்சிக் கொடியிலே ஏற்றுக் கொண்டார். உதய சூரியன் பக்குவம் முற்றாதவன். உச்சிச் சூரியனே பக்குவம் முற்றியவனல்லவா? சூரியனைக் கொடியினில் உதயம் பண்ணச் செய்தார் அண்ணா, பொதுமக்களுக்குக்கோடி கோடியாக நற்பணி ஆற்றினார். மக்கள் அவரை அரச பதவிக்கு ஏற்றினர். அண்ணாவுடன் அவர் கட்சியும், கட்சிக்கொடியும் கொடியில் பொறித்த உதய சூரியனும் அரச பதவிக்குற்றனர். கூர்ந்து நோக்கின் அண்ணா அவர்கள் சூரியனுக்குச் செய்த பேருதவி என்னவாம்? பொலிவு மலியாத இளஞ்சூரியனை, கட்சிக் கொடி என்னும் தேரிலமர்த்தி, பொதுப் பணி என்னும் தேரோச்சும் திறமையினால் தேரை விரையச் செலுத்தி, தமிழக அரச பதவி என்னும் பொலிவு முற்றிய உச்சி வானுக்கு இட்டு வந்து விட்டாராம் அண்ணா. "எந்நோற்றான் கொல் இவன்"—என்று தந்தையாகிய தன்னை மெச்சும் படியாக உச்சிப் படிக்குக் கொணர்ந் தமர்த்திய செல்வ மகன் அண்ணாவை மடியிலிட்டுச் சீராட்டிப் பாராட்ட வேண்டும் என்று வாஞ்சைத் துடிப்பு ஊக்கியதாம் சூரியனுக்கு. தேவர் குழாமில் ஒருவனான மறலி அதாவது யமன் சூரியனுக்கு நண்பன்தானே. எனவே தோழனான யமனிடம் சூரியன் சொன்னானாம்: "என் வாஞ்சைப் புதல்வன் காஞ்சிச் செல்வன் அண்ணாத்துரையை என் மடியிலிட்டுக் கொஞ்சிக் குலாவி மகிழ ஆவல், காவல் மீறிப் போய் விட்டதப்பா எனக்கு. எனவே நீ சென்று அவனை உடனே இங்கு கொணர்க"—என்று. இப்படியாக உணர்ச்சி வீறினால் உருவகப் படுத்துகிறது இப்பாடல்.

★

சிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்
திருக்கச்சிநம்பி தெரு அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.